★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice
Sri Lanka under No: QB/8943/78

மலர்: 21 வைகாசி: 25 றஜப்: 12 இதழ்: 118
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 8-6-79

இறக்குமதி செய்யப்பட்ட
ஃ பலவித பரிசுப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள், தையல் வேலைகளுக்குரிய சகல பொருட்கள்.
மற்றும்
ஃ யப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பலதரங்களிலுமுள்ள காதுகேட்கும் கருவிகள் யாவற்றையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.
கிருபா கிவ்ற் கவுஸ்
KIRUB GIFT HOUSE,
சோதிட விலாஸ் கட்டிடம்
46, பெரியகடை - யாழ்ப்பாணம்.
தொலை பேசி; 8083

## யாழ். உதவி மேயர் பதவி ஏற்றார்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபை உதவி மேயர் திரு. பி. எப். சேவியர் நேற்று தமது பதவியை முறைப்படி ஏற்றுக் கொண்டார்.

திரு. சேவியர் யாழ். நீதவான் திரு. ஆசிர்வாதம் முன்னிலையில் சமாதான நீதவானாகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டபின் ஆதரவாளர்களால் மாநகரசபைக்கு

[6-ம் பக்கம் பார்க்க]

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS ★ LIBRARY ★ PERIODICALS DIVISION RECEIVED 11/7-6-

### அணிசேரா அமைச்சர்களின் மகாநாடு

# முக்கிய இரு பிரச்னைகளிலும் இன்னமும் பிரதிநிதிகள் இழுபறி

## ஒருமைப்பாடு ஏற்படுத்த இலங்கை மந்திரி பெருமுயற்சி

(கொழும்பு)

**கம்பூச்சியாவுக்கு பிரதிநிதித்துவம், எகிப்தை வெளியேற்றுவது ஆகிய பிரச்னைகள் மீது இன்னமும் அணிசேரா நாடுகளின் அமைச்சர்களுக்கிடையில் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை.**

இந்த இரு பிரச்னைகள் மீது குழுக்களிடையே ஒருமைப்பாட்டை உருவாக்கும் முயற்சியில் இலங்கை வெளிநாட்டமைச்சர் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அணிசேரா நாடுகளின் ஒருங்கிணைப்பு பணியகத்தின் வெளிநாட்டமைச்சர்களின் முழு நிறைவான மகாநாடு நேற்று மாலை 5-30 மணிக்குத்தான் ஆரம்பமானது என்றாலும் மேற்குறித்த முக்கிய இருபிரச்னைகளிலும் ஏகோபித்த கருத்து ஏற்பட்டிருக்கவில்லை. ஒருமைப்பாடு உருவாகும்வரை இப்பிரச்னைகளை மகாநாட்டில் எளப்புவதில்லையென ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

கம்பூச்சியாவின் பொக் பொட் நிர்வாகப் பிரதிநிதிகளை சபையில் அமர்ந்திருக்க அனுமதிப்பதென்றும், ஆனால் பேசுவதற்கு அனுமதிப்பதில்லையென்றும் முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் கருதப்படுகின்றது.

மேற்படி இரு பிரச்னைகளிலும் உறுப்பு நாடுகளுக்கிடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்காக நேற்று மாலைவரை இலங்கை வெளிநாட்டமைச்சர் ஹமீத் சுமார் 20 நாடுகளின் பிரதிநிதிகளுடன் ஆலோசனை நடத்தினர். இப்பேச்சுக்கள் கடந்த இரவும் வெகுநேரம்வரை நீடித்தன.

இன்று மீண்டும் அமைச்சர்களின் முழுநிறைவான கூட்டம் நடைபெறும்போது பல நாடுகளின் குழுத்தலைவர்கள் உரை நிகழ்த்துவார்கள்.

நேற்று ஈராக் சமர்ப்பித்த பிரேரணையொன்றை மகாநாட்டு பொருளாதாரக்குழு ஆலோசனைக்கெடுத்துக்கொண்டது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பணவீக்கத்தினால் ஏற்படும் தாக்கத்தை சமாளிப்பதற்கு உதவும் பொருட்டு சர்வதேச நிதிப்பிரிவு ஒன்றை நிறுவவேண்டும் என ஈராக் பிரேரித்துள்ளது. இந்தப் பிரேரணை மீது பிரதிநிதிகள் நேற்று வெகு நேரம்வரை ஆலோசனை நடத்தினார்கள்.

## குறைந்த விலையில் தொலைக்காட்சிப் பெட்டிகள்

(கொழும்பு)

தொலைக்காட்சிப் பெட்டிகளை இறக்குமதி செய்து தனியார் ஸ்தாபனங்கள் விற்கும் விலையிலும் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதற்கு அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் முடிவு செய்திருக்கின்றது.

இந்தத் திட்டத்தின்படி விரைவில் சுமார் 1060 தொலைக் காட்சிப் பெட்டிகள் கப்பல் மூலம் வந்து சேரவிருக்கின்றன. ஜப்பானிலிருந்து தருவிக்கப்படும் இப்பெட்டிகளின் குறைந்த விலை ரூ. 1,200 ஆக இருக்கும். வர்ணக்காட்சிப் பெட்டிகளின் விலைகள் சற்று அதிகமாக இருக்கும்.

அரசு வர்த்தகக் கூட்டுத்தாபனமே இவ்வாறு கூடுதலான தொலைக்காட்சிப் பெட்டிகளை தருவித்து விற்கவிருப்பதால் இவைகளின் விலைகள் மேலும் வீழ்ச்சியடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## டெஸ்ட் கோஷ்டிகளுடன் இலங்கை மோதும்

லண்டன், ஜூன், 7

உலக வெற்றிக் கிண்ணத்திற்கான பூர்வாங்க கிரிக்கட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் டென்மார்க் கோஷ்டியை இலங்கை கோஷ்டி வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

இவ்வெற்றியின் மூலம் அடுத்த சனிக்கிழமை ஆரம்பமாகும் உலக கிண்ண கிரிக்கட் போட்டிகளில் டெஸ்ட்கோஷ்டிகளான இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்தியா ஆகிய கோஷ்டிகளுடன் இலங்கைக் கோஷ்டியும் மோதும்.

நேற்றைய ஆட்டத்தில் இலங்கை 60 ஓவர்களில் 8 விக்கட் இழப்புக்கு 318 ஓட்டங்களைப் பெற்றது. ரோய் டயஸ் 88 ஓட்டங்களையும் டியூலிப் மெண்டிஸ் 68 ஓட்டங்களையும் காப்டன் தென்னக்கோன் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

டென்மார்க் 45.5 ஓவர்களில் 108 ஓட்டங்களைப் பெற்றது. (இ)

## இலங்கை நாளை நியூஸிலந்துடன் மோதும்

லண்டன், ஜூன் 7

உலக வெற்றிக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ள தகுதி பெற்ற இலங்கைக் கோஷ்டி நாளை நியூஸிலாந்துக் கோஷ்டியுடன் 'ஏ' பிரிவில் மோதுகின்றது.

தெரிவு செய்யப்பட்ட மற்றைய கோஷ்டியான கனடாக் கோஷ்டி 'பி' பிரிவில் அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் கோஷ்டிகளுடன் மோதும். (கு)

## வேக நடையில் புதிய உலக சாதனை முயற்சி

### யாழ். வீரர் இன்று ஆரம்பிக்கிறார்

[யாழ்ப்பாணம்]

வேகமாக நடப்பதில் புதிய உலக சாதனையை ஏற்படுத்தும் முயற்சியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. க. தேவராஜ் சுந்தரம் இன்று ஈடுபடுகிறார்.

யாழ்ப்பாணம் விளையாட்டுக்கழக அங்கத்தவரான திரு தேவராஜ் தமது சாதனை முயற்சியை இன்று பிற்பகல் 5 மணிக்கு கோட்டை முனீஸ்வரன் வீதியில் ஆரம்பித்து தொடர்ந்து சுப்பிரமணியம் பூங்காவைச் சுற்றி நடந்து சாதனையை நிலைநாட்டத் திட்டமிட்டுள்ளார்.

சாதனை முயற்சியை வைத்தியகலாநிதி ஜே. பி. ஒ. பிலிப் ஆரம்பித்துவைப்பார். இவ் ஆரம்பவிழாவில் யாழ் மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதன் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ்ப்பாணம் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் இச்சாதனை முயற்சி நடைபெறுகிறது. (கு)

## விண்வெளியில் இந்தியாவின் 2-வது செயற்கைக் கோள்

[மாஸ்கோ]

இந்தியாவின் இரண்டாவது விண்வெளிச் செயற்கைக் கோள், நேற்று மாஸ்கோவிலிருந்து விண்வெளியில் செலுத்தப்பட்டது.

இந்தியாவின் முதலாவது செயற்கைக் கோளான ஆரியபட்டா, இன்னமும் விண்வெளியில் இருப்பதாகக் கருதப்பட்டபோதிலும் அதனுடனான கட்டுப்பாட்டு நிலையத் தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளன.

இப்பொழுது விண்வெளியில் பவனிவரும் இந்தியாவின் இரண்டாவது விண்வெளிச் செயற்கைக்கோளுக்கு பாஸ்கர் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## பாவனையாளர் சேவை நிலையம்

[கொழும்பு]

வர்த்தகர்களின் மோசடிகளிலிருந்து பாவனையாளர்களைப் பாதுகாக்க அரசாங்கம் பாவனையாளர் சேவை நிலையம் ஒன்றை அமைக்கவிருக்கிறது.

வர்த்தகமந்திரி திரு. லலித் அத்துலத்முதலி இத்தகவலை நேற்று வெளியிட்டார்.

பொருட்களின் தரங்களையும் இந்நிலையம் கண்காணிக்கும்.

## திருக்குறள் மாநாடு: வானொலியில் அஞ்சலாகும்

[யாழ்ப்பாணம்]

நாளையும் நாளை மறுதினமும், நெடுந்தீவில் நடைபெற இருக்கும் திருக்குறள் மாநாட்டு நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஒலிப்பதிவு செய்து அஞ்சல் செய்வதற்கு இணங்கியுள்ளது.

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சிப் பொறுப்பாளருடன் தொடர்பு கொண்டதையடுத்து நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்வதற்கு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர் இணங்கியுள்ளனர். மாநாட்டில் கலந்துகொள்வோர்க்கு வசதியாக வழமையான இருபடகுச் சேவைகளுடன் மேலதிகமாக இன்னுமொரு சேவையும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

காலை 9-00 மணி, பகல் 1-00 மணி, பிற்பகல் 3-30 மணிக்கு மூன்று படகுச் சேவைகள், குறிகாட்டுவான் இறங்குதுறையிலிருந்து நெடுந்தீவுக்குச் சனியும், ஞாயிறும் விசேடமாக நடைபெறவுள்ளன. (செ)

## வரிவிளம்பரம்

### தேவை

ஜி. பி ''கோப்பி பார்'' இல் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. நேரில் வரவும், 61, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 2697

### FOR SALE

Morris Oxford Car 3 Series in perfect condition Contact: T Uthayakumar, 10, Main Street, Jaffna 2695

### விற்பனைக்கு

மணிக்கூட்டு வீதியில் 75-ம் இலக்க இரண்டு கடைகளும், வீடும் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: 45, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் 2690

3 ஸ்ரீ B.S.A. 3.5, B-31 மொடல், உன்னத நிலையில் விற்பனைக்குண்டு. அமிர்த சுரபி வைத்தியசாலை, 553, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2685

டாக்டரின் உபயோகத்தில் உள்ள EL 9000 தொடர் இலக்க A 50 ஒஸ்ரின் கேம்பிறிஜ் கார் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: திருமதி குழந்தைவடிவேல், கதிரிப்பாய், அச்சுவேலி. 2689

உரும்பிராய் சந்திக்கு அருகாமையில் கோப்பாய் றோட்டில் மூன்று பரப்புக் காணியும் கிணறு வசதிகளுடன் உள்ள வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். நா. மு. சந்தையா, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய். 2682

கூடுதல் பயன் தரக்கூடிய நல்ல இன செவ்விழநி தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு. தொழிற்சாலையில் பெற்றுக்கொள்ளலாம். மிக்க வைற் - யாழ்ப்பாணம். 2701

வ. மகாலிங்கம்
சட்டத்தரணி, சரவெட்டி.

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றம்

சரணவாய் வடக்கு, கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னையா கிருஷ்ணபிள்ளையின் மரணசாதனமில்லாச் சொத்துக்கள் சம்பந்தமாக

சின்னையா கிருஷ்ணபிள்ளை காலஞ்சென்றவர்
பழனிப்பிள்ளை கனகரத்தினம், கரவெட்டி மேற்கு,
கரவெட்டி — மனுதார்

மரணசாதன
தியாயாதிக்கம் 1072 / ரி

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேற் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு ஆடி மாதம் 20 ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் முன்னர்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

நீதிமன்றக்கட்டளைப்படி

க. விஸ்வலிங்கம்,
பதிவாளர்.

1979-ம் ஆண்டு ஆனிமாதம் 1-ம் நாளன்று திகதியிடப்பட்டுள்ளது 2666

# பாராளுமன்றத்தில் இந்திய வெளியுறவு மந்திரி

(கொழும்பு)

இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. வாஜ்பாயி நேற்று முன்தினம் இலங்கை பாராளுமன்றத்துக்கு விஜயம்செய்து சபைநடவடிக்கைகளை சுமார் 10 நிமிடநேரம் கவனித்துக் கொண்டிருந்தார்.

திரு வாஜ்பாய் வரும்போது எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கம் பேசிக்கொண்டிருந்தார்.

சுமார் பத்து நிமிடங்கள் இருந்தபின் திரு. வாஜ்பாய் வெளியேறினார்.

பலாலி விமான நிலையத்தைத் திறக்கவேண்டியதன் அவசியத்தை திரு. அமிர்தலிங்கம் சபையில் வலியுறுத்தினார். இப்பொழுது ஒரு விமானப் படைத்தளமாக மாத்திரமே இது பயன்பட்டுவருகின்றது எனவும் கூறினார்.

இந்தக்கட்டத்தில் அவ்ரோ விமானம் எரிக்கப்பட்டதை அரசாங்கத் தரப்பு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி கூச்சலிட்டனர்.

அது யாரோசெய்த காரியம் அதற்காக விமான நிலையம் மூடப்பட்டிருப்பது நியாயமில்லையென்று திரு. அமிர்தலிங்கம் சொன்னார். அப்பொழுதும் கூச்சல் அதிகமாக இருக்கவே எந்த நிரந்தரவிதிகளின் கீழ் இவர்கள் இப்படி கூச்சல் போடுகிறார்கள் என்று தெரியவில்லையென்று அமிர்தலிங்கம் சொன்னார்

கல்வி அமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்ன குறுக்கிட்டு மாசாச்சுசெட்ஸ் மாநிலத்துக்குப்போய் இந்த விஷயத்தையும் நீங்கள் தப்பாக எடுத்துக் கூறுமலிருப்பதற்காகத்தான் என்றார். அதற்கு அமிர்தலிங்கம் மாஸ்கோ, நியுயோர்க் நகரங்களில் நிலைமை எப்படியிருக்கிறது என்று கேட்டார். அங்குள்ளவர்கள் அதிக புத்திசாலிகள் என்றார் அமைச்சர். (ம)

## ''பாடசாலை அபிவிருத்தியில் சகலருக்கும் பங்குண்டு''

(யாழ்ப்பாணம்)

''பாடசாலை அபிவிருத்திக்கு பெற்றோர் ஆசிரியர் மட்டுமல்லாது பழையமாணவரும், பாடசாலை நலன்விரும்பிகளும் பங்கு கொள்ள வேண்டுமென் பதாலேயே பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் அமைக்கப்படுகின்றன.

கொடிகாமம் அரசினர்வித்தியாலய அபிவிருத்திச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசிய அதிபர் திரு வி பெ செல்லத்துரை மேற் கண்டவாறு கூறினார்.

கடந்த காலத்தில் பழைய மாணவர்கள் இப்பாடசாலை அபிவிருத்தியில் பெரும் பங்கு எடுத்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களாக கீழ்க்காணுவோர் தெரிவாகினர். தலைவர்: திரு வி பெ செல்லத்துரை. உப-தலைவர்: திரு ந கார்த்திகேசு, செயலாளர் திருமதி க சுப்பிரமணியம், உப செயலாளர் திருமதி சா யோகநாதன், தனாதிகாரி: திரு அ திருநாவுக்கரசு கமிட்டி உறுப்பினர்கள் திருவாளர்கள் சி நடராசா, த சிதம்பரப்பிள்ளை, நா பொன்னுத்துரை, மு மோகனதாஸ், க சிவஞானசுந்தரம், ந நவரத்தினம், ச திருச்செல்வம் திருமதி ஞா வாரித்தம்பி, திருமதி பா கந்தையா, செல்வி க மாலினி. (ஈ)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்
ஈடு வழக்கு இல: 14849

இல: 12/1, பணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

1. என். துரைசிங்கம்
2. பெண் கனகம்மா இருவரும் — வாதிகள்

எதிராக

இல: 2/2, மருதடி வீதி,
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.

1. சபாபதி பொன்னையாவும்
2. பெண் செல்லம்மா இருவரும்

— பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 14849-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1979ம் ஆண்டு ஆடி மாதம் 5-ந் திகதி (5-7-79) வியாழக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

ரூபா 3,250/-ம், 6-5-75 தொடக்கம் 11-3-76 வரைக்கும் ரூபா 2,000/-க்கு 12 வீத வட்டியும், அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரைக்கும் 5 வீத வட்டியும், வழக்குச் செலவு ரூபா 492-50சதமும், செலவின் ஒரு பகுதியாக ரூபா 200/- செலுத்தப்பட்டுள்ளது.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப் பகுதி. நல்லூர்க் கோவிற்பற்று நல்லூர் இறை ''பத்தினி நாச்சன் வயலும், பத்தினி நாச்சன் குளமும்'' உறுதிப்படி நில. இலா 6 ஆகும் 1969ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10-ந் திகதி உத்தரவுபெற்ற உலாந்தா பி ஏ சேனாதிராசாவால் 383-ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தின்படி பர நில இலாச்சம் 3 குளி 11 இதில் '1' என்னும் எண்ணுல் காட்டப்பெற்ற பாகம் பரப்பு நில இலாச்சம் 1குளி 14 1/2-ம் மூழுக்காணிக்குள் இருக்கும் கையொழுங்கையில் இதற்குரிய பங்கும் இந்தப்பரப்பு நில இலாச்சம் 1குளி 14, 1/2க்கும் எல்லை கிழக்கு: சுந்தரலிங்கம் ஆறுமுகம்பிள்ளை பெண் நாகமுத்துவிற்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், வடக்கு: கணபதிப்பிள்ளை நடராசாவிற்குரிய வாதனம், மேற்கு தம்பர் சின்னத்தம்பிக்கும் தம்பர் சரவணைக்குமுரிய வாதனங்களும் இந்தக் காணிக்கும் வடக்கேயிருக்கும் காணிக்கும் விடப்பட்ட கையொழுங்கையும் தெற்கு: குறித்த படத்தில் '2' என்னும் எண்ணுல் காட்டப்பட்டபாகம் - இவ்வறுதிவிற்பவருக்குரிய வாதனம் இதடங்கலும் மேற்கேயிருக்கும் மருதடி றோட்டுக்குப் போக்குவரவு செய்யும் உரித்தும்.

செ. பாண்டித்துரை,
கொமிஷனர், விலைமதிப்பாளர்.

மல்லாகம்.
9-5-79. 2691


## கொடித்தினம்

9-6-79 முதல் 13-6-79 வரை சுன்னுகம் புனித அந்தோனியார் ஆலய

### திருப்பணி நிதி

புனிதரின் ஆலயம் சிறக்க, பக்தர்கள் வசதியாக வணங்க வருடத்தில் ஒருமுறை வாரி வாரி வழங்குவீர் என அன்புக்கரங்கள் நீட்டி நிற்கின்றோம்.

பங்குத்தந்தை,
அருட்திரு B. சூசைப்பிள்ளை. 2698


## கோப்பாய் கிராமசபை

## கேள்வி விளம்பரம்

கோப்பாய் கிராமசபை விசேட ஆணையாளர் அவர்களால் கீழ்க்காணப்படும் வேலைகளுக்கு சீல் வைத்த கேள்விகள் 22-6-79-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 21-6-79 வியாழக்கிழமை மாலை 2-00 மணி வரைக்கும் வழங்கப்படும். கேள்விப்பத்திரப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களை கிராமசபை அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

| வேலையின் பெயர் | பத்திரப் பணம் | பிணைப் பணம் |
|---|---|---|
| ........... | ........... | ........... |
| 1. சரவணபவானந்த வித்தியாசாலை கிணறு கோப்பாய் வடக்கு | 10/- | 50/- |
| 2. வலந்தை வீதி கோப்பாய் வடக்கு | 10/- | 50/- |

ஜே. எஸ். எஸ். ஆனந்தன்,
விசேட ஆணையாளர்,
கோப்பாய் கிராமசபை.

விசேட ஆணையாளர் அலுவலகம்,
கிராமசபை, கோப்பாய்.
6-6-79. 2696

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல ஈடு / 13842

1. காலஞ்சென்ற செல்வலஷ்சுமி ஆ, சோமசேகரத்தின் கைம்பெண்ணின்
2. சட்டபூர்வமான நிறைவேற்றுநராகிய சுப்பிரமணியம் காசிநாதனும்
3. இராசம்மாவும் எல்லோரும் காரைநகர் மேற்கு

எதிராக — வாதிகள்

1. இராஜரட்ணம் சுந்தரமூர்த்தியும்
2. அவரின் மனைவி கமலாம்பாள் இருவரும் 76, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

— பிரதிவாதிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு / 13842-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகளும், கடைக்கட்டிடங்களும் 1979-ம் ஆண்டு ஆடி மாதம் 6-ம் திகதி (6-7-79) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த 1-ம், 3-ம் வாதிகளுக்கு முதலும் வட்டியும் ரூபா 64843-76 சதமும், மேற்கொண்டு ரூபா 50,000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 15% வட்டி வீதம் 23-5-73லிருந்து 7-1-75 வரைக்கும் அதன் பின் இறுக்கும்வரைக்கும் முழுத் தொகைக்கும் வருடமொன்றுக்கு 5% வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 833-96 சதமும் கொடுத்தல் வேண்டும். இதில் தீர்வையால் 2-8-76ல் ரூபா 5000/-ம் மேலும் 27-8-76 இல் ரூபா 10,000/ம் கழித்து மிகுதி அறவிடப்படவேண்டும்.

### குறித்த ஆதனடாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் தென்மேற்கு வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணையிலுள்ள ''முதலையனர் வளவு'' சந்தையிட்டித்திடல்'' 'சீமாந்திடல்' 'திருவளர்திடல்' என்றழைக்கப்படும் 26 பரப்பு 10 குளி கொண்ட நெற்காணியில் 5 பரப்பு தெற்காணியும் 76. B. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள கடைக்கட்டிடமும் சேர்த்து விற்கப்படும் இக்காணி T. கந்தையா உத்தரவு பெற்ற உலாந்தாவினுல் 8-5-71ல் தயாரிக்கப்பட்ட 5006-ம் இலக்கப்படத்தில் காட்டப்பட்டுள்ளது. இக்காணியின் கிழக்கும், தெற்கும் இராசரத்தினம் சுந்தரமூர்த்தியும் அவர் மனைவி கமலாம்பாளுடையதும் மேற்கு இராசரத்தினம் சுந்தரமூர்த்தியும் அவர் மனைவி கமலாம்பாள் வேறொருவருடையதும் வடக்கு வீதியையும் கொண்டுள்ளது. இக்காணியின்மேற்குப் பக்கத்தால் ஒழுங்கையாகப் பாவிக்கும் உரிமையுங்கொண்டுள்ளது. இது யாழ்ப்பாணத்தில் D 378/153 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2 ''முதலையனர் வளவு'' 'சந்தயிட்டித்திடல்' 'சீமாந்திடல்' 'திருவளர்திடல்' என்றழைக்கப்படும் 26 பரப்பு 10குளி கொண்ட நெற்காணியில் ஒரு பரப்புத் தெற்காணியும் 76 A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள கடைக்கட்டிடமும் சேர்த்து விற்கப்படும் இக்காணி உத்தரவுபெற்ற உலாந்தா T. கந்தையா அவர்களால் 26-2-71 -இல் தயாரிக்கப்பட்ட 4837 A இலக்கப்படத்தில் 1-ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது வண்ணார்பண்ணை தென்மேற்கிலுள்ள இக்காணியின் கிழக்கு, தெற்கு, மேற்கு இராஜரட்ணம் சுந்தரமூர்த்தியினதும் அவர் மனைவி கமலாம்பாளுடைய ஆதனம் வடக்கு வீதியாகவும் அமைந்துள்ளது இது யாழ்ப்பாணத்தில் D 377/162 ஆகப் பதியப்பட்டுள்ளது

சி ஆ. த. வடிவேலு ஜே. பி.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும், விலைமதிப்பாளரும்.

''வடிவேல் உதயம்''
காங்கேசன்துறை வீதி, கோண்டாவில்;
14-5-79 2687

## மக்கள் கருத்து

### யாழ். மாநகரசபை புதிய நிர்வாகம் கவனிக்குமா?

நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம் என்பர். மக்களின் சுகவாழ்விற்கு வழிசெய்யவேண்டியது அரசாங்கத்தினதும், உள்ளூராட்சி சபைகளினதும் தலையாய கடமையாகும். யாழ் மாநகராட்சி மன்றம் மக்களுக்கு அளப்பரிய சேவைகளை ஆற்றி வருகின்றபோதும் நீண்டகாலமாக "யாராவது அழட்டும் நாம் மட்டும் சிரித்தால் போதும்" என்ற போக்குடன் தட்டிக்கழித்து வரும் சில பொறுப்புக்களை இங்கு சுட்டிக்காட்டுதல் பயனுடையதென்று எண்ணுகிறேன்.

யாழ். மாநகரசபையின் பார்வையில் தென்படாத ஒரு பகுதியான யாழ். மேற்குப் பகுதியிலே கொழும்புத்துறையிலுள்ள வளன்புரம், துண்டி என்பன காணப்படுகின்றன. இங்கு கடற்கரையை யொட்டியபடியே உள்ள ஒரு மூலையில் கக்கூஸ் வண்டிகளிலிருந்து மலம் கொட்டுதற்கு மாற்றப்படுவதான ஒரு பேரவையில் வாளிகளிலுள்ள முழுமலமும் கடலோடு சங்கமமாகின்றது. இப்புண்ணிய கைங்கரியத்தை மேற்பார்வையாளரின் முன்னிலையிலே தொழிலாளர்கள் செய்கின்றனர். அது மட்டுமா? மலத்தை ஏற்ற லொறி வருவதற்கு ஒரு சில மணித்தியாலங்கள் தாமதித்துவிட்டால் நிலைமையைச் சொல்ல வேண்டியதில்லை கடற்கரைக்கு வாயிருந்தால் "பட்டதெல்லாம் போதும் படமுடியாதினித்துயரம்" என்று சொல்லும்.

இச்செயலால் துண்டி, வளன்புரம், பாஷையூர், கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலை முதலிய பகுதிகளில் உள்ள மக்கள் வாழமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு விரக்தியடைந்த நிலையிலுள்ளனர். நாள்முழுவதும் இங்கிருந்து எழும் துர்நாற்றத்தால் மக்கள் சுகம் பெரிதும் பாதிப்படைகின்றது. இதைப் பற்றி இப்பகுதி மக்கள் எத்தனையோ தடவை முறையிட்டும் அப்பகுதியின் துரதிர்ஷ்ட நிலை நீங்கியபாடில்லை. பத்திரிகைகளுக்கு எழுதியும் கைவலித்ததேதவிர கண்டபலன் ஒன்றுமில்லை ஏன் இந்தக் கண்கட்டு வித்தை? எதற்காக இந்தக் காட்டுமிராண்டித்தனம்? மலத்தைக் கொட்டி அப்பகுதியை பாழாக்குவதோடு மட்டும் நில்லாது 'நரகமாக' இவ்விடத்தை மாற்றிவிட்டது மாநகராட்சி மன்றம். இத்தனையும் இடித்துரைப்பதன் காரணம்? வேதனையால் துடிப்பவர்கள் மக்களன்றி மாநகரசபையல்ல என்பதைக் காட்டவே.

தேர்தல்விழாக் காலங்களில் மட்டும் வாக்குவேட்டையாட வந்துபோகும் அரசியல் பிரமுகர்கள் கூட சாக்கடையாகக் கிடக்கும் இவ்விடத்தைக் கருத்தில் கொள்ள மறுக்கின்றார்களே என்பது கவலைக்குரியதாகும். இப்பகுதிமக்கள் ஏறத்தாள எட்டுவருடமாக அனுபவித்துவரும் இந்நிஷ்டூரத்தை ஒழித்து இப்பகுதி மக்களை மனநிறைவுடன் வாழச்செய்ய மாநகரசபையின் புதிய நிர்வாகம் வழிவகுக்குமென எதிர்பார்க்கின்றோம்.

கே. பிரான்சிஸ்விக்டர்,
வளன்புரம்,
கொழும்புத்துறை.

# "சமயச்சார்பற்ற எந்த இலக்கியமும் தமிழில் எழவில்லை இளைஞர்கள் உணரவேண்டும்"

## என்கிறார் சிங்காரவேலன்

## ஈழத்தமிழ் இளைஞரின் சமயப்பற்றுக்கும் பாராட்டு

சமயச் சார்பற்ற எந்த இலக்கியமும் தமிழிலில்லை. இன்றைய இளைய தலைமுறையினர் நிதானமாக உணர்ச்சி வசப்படாமல் சிந்தித்துச் சமயத்தாலே மொழி பெற்றுள்ள நன்மைகளை உணர வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் நடாத்திய சேக்கிழார் விழாவில் விரிவுரையாற்றுமுகமாக இங்கு வந்துள்ள செஞ்சொற் கொண்டல், திருமுறைச் செம்மல் பேராசிரியர் சொ. சிங்காரவேலன் கருத்துத் தெரிவித்தார்.

சமயத்துறையில் டாக்டர் பட்டம்பெற்றவாரான திரு. சிங்காரவேலன் சிறந்த அரசியல் ஞானமும், ஈடுபாடும் உள்ளவராகவும், கதைகள், கவிதைகள் எழுதுவதில் வல்லவராகவும் விளங்குகிறார்.

திரு. சிங்காரவேலனிடம் இன்றைய இளம் தலைமுறையினருக்கு நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன என வினவியபோது அவர் கூறியதாவது:

இளைஞர்கள் நிதானமாக உணர்ச்சிவசப்படாமல் சிந்தித்து எக் கருமங்களையும் ஆற்றவேண்டும், சமயத்தின் மூலம் தமிழ் மொழி பெற்றுள்ள நன்மைகளை எண்ணிப்பார்க்கவேண்டும். சமயச் சார்பற்ற இலக்கியங்களே இல்லை என்று கூறுமளவிற்கு இலக்கியங்களில் எல்லாம் சமயம் இழையோடியிருக்கின்றது. எந்த இலக்கியமும் ஏதாவது ஒரு சமயத்தைச் சார்ந்ததாகவே உள்ளது.

### சங்ககாலம் தொடக்கம் கண்ணதாசன் வரை

சங்ககால இலக்கியம் தொடங்கி இன்றுள்ள கண்ணதாசனின் புதிய பாட்டு இலக்கியம் வரை சமயக்கருத்துக்களின் ஒளிச்சிதறல்களை நாம் கவனிக்கின்றோம். எனவே இளைஞர்கள் ஏதாவது ஒரு சமயத்தைச் சார்ந்துதான் இலக்கியத்தை அனுபவிக்க முடியும். ஒருவகையில் ஒன்றுபட்ட மனத்தை இந்தமாதிரி ஆழ்ந்த படிப்புத்தான் உண்டாக்கமுடியும். பொதுமறை பாடிய திருவள்ளுவர் கூட கடவுள்வாழ்த்துடன் தான் தமது நூலைத் தொடங்கியுள்ளார். சமய நம்பிக்கை என்று சொல்லும்போது நான் குறிப்பிட விரும்புவது எல்லாவற்றையும் பரவலாக மேம்போக்காக பார்க்கின்ற பார்வையல்ல. ஒன்றிலே ஊன்றி நிற்பது. அதைத்தான் ஆழ்ந்த பார்வை என்று கருதுகின்றேன். இதையே தான் தமிழ்ப்பாட்டி ஔவையார் கூட 'ஒருவனைப் பற்றி ஓரகத்திரு' என்று வலியுறுத்தியுள்ளார்.

### ஒரு கொள்கை

ஒரு கொள்கை! ஒருசமயம், ஒரு கடவுள் என்ற போக்கிலே இளைஞர்கள் குறிப்பாக தமிழ் இளைஞர்கள் நின்றால் தான் அவர்களுடைய எதிர்கால வாழ்க்கை திருத்தமாக அமையும் என்பது எனது ஆழ்ந்த நம்பிக்கை. 25 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்நாட்டுக் கலைக்கல்லூரி மாணவர்களுடனும் 'இளங்கலை' 'முதுகலை' பட்டப்படிப்பு மாணவர்களுடனும் பழகி வருவதால் இளம் தலைமுறையினரின் எண்ணங்களை ஓரளவு புரிந்தவன் என்றவகையிலும் நான் இளம்தலைமுறையினருக்குச் சொல்லவிரும்புவது' சமய நம்பிக்கைகளைப் பொறுத்தவரையிலும்சொல்ல விரும்புவது இது ஒன்றே:

ளார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி காரணம் இங்கு தொடக்கக் கல்வியில் அதாவது 2ம் தரத்திலிருந்து சமயம்போதிக்கப்படுவதே ஆகும். தமிழ்நாட்டில் இத்தகைய கல்விமுறை பின்பற்றப்படவில்லை என்பது வருத்தத்திற்குரிய செய்தியாகும். இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் இப்போதுதான் இதுபற்றி அறிவித்திருக்கின்றார், அதாவது ஆரம்ப வகுப்புகளிலேயே கல்லூரிகளில் அறநெறியைப் புகுத்துவது என்று

இம்முறை சீக்கிரம் பின்பற்றப்பட்டால் நல்லது."

சமயப்பற்றோடு, தமிழ் மொழிப்பற்றும் கொண்டு பல அரிய தமிழ் நூல்களை எழுதித் தமிழ்ப்பணி ஆற்றிவரும் இவரிடம் இதுவரை எத்தனை நூல்கள் எழுதியுள்ளீர்கள் எனக் கேட்டபோது. "இதுவரை இருபத்தைந்துக்குமேற்பட்ட புத்தகங்கள் எழுதியிருக்கின்றேன், ஷேக்ஸ்பியருடைய நாடக அமைப்பை ஒட்டிச் செய்யுள் நடையில் ஐந்து அங்கங்கள் கொண்ட, சங்க இலக்கியப் பின்னணியை வைத்து ஒரு கற்பனை நாடகமான

**சந்திப்பு: க. திருரவீந்திரநாதன்**

"தமிழ்நாட்டில் இருபது வருடங்களுக்கு மேலாக இளங்கலை, முதுகலை மாணவர்களோடு பழகிவரும் நீங்கள் ஈழம்வாழ் இளைஞர்களுக்கும், தமிழ்நாடு இளைஞர்களுக்கும் இடையில் ஏதாவது வேறுபாடு காணமுடிகிறதா என்று கேட்டதற்கு அவர் சொன்னார்.

### சமயப்பார்வையில் வேறுபாடு

"இளைய தலைமுறையினரின் இலட்சியப் போக்குகள் ஒன்றுபட்டதால் இருக்கின்றன. சமுதாயப்பார்வை ஒன்றாக இருந்தாலும் சமயப் பார்வையில் பெரிய வேறுபாடு உண்டு. தமிழ்நாட்டு இளைஞர்கள் ஆழ்ந்த சமயப் பயிற்சி இல்லாதவர்கள். ஆனால் ஈழத்துத் தமிழ் இளைஞர்கள் நல்ல சமயப் பயிற்சி அனுபவத்தைப் பெற்றுள்

'ஊமைக்குயில்' புத்தகத்தை வெளியிட்டேன். தமிழ் நாட்டில் நல்ல வரவேற்பைப் பெற்றதோடு விரைவில் அது தமிழ்நாட்டில் 'பட்டவகுப்' பாடநூலாக அமையவிருக்கின்றது. அதைவிடச் சமயக் கட்டுரைகள் பலவற்றையும் எழுதியுள்ளேன். 'வள்ளுவன் என் தோழன்' என்ற ஒரு கவிதைத் தொகுப்பும், வெளிவந்தது. எட்டு ஆண்டுகளுக்கு முன் காரைநகரில் ஒரு விழாவில் கலந்துகொள்ள வந்திருந்தபோது 'கதிரேச சதகம்' என்றநூலை எழுதி அதனை வெளியீடும் உரிமையை அவர்களுக்குக் கொடுத்தேன். இதில் கதிர்காம முருகன்மேல் பாடப்பட்ட நூறு பாடல்கள் உள்ளன. ஈழத்துப் பத்திரிகைகளில்கூட பல கட்டுரைகளை எழுதியுள்ளேன். அண்மையில் 'புதுமைக் குறள்' என்ற ஒரு நூலை வெளியிட்டுள்ளேன். தமிழ் நாட்டில் பல அறிஞர்களும், இப்புத்தகத்தை மெச்சிப் பாராட்டினார்கள். நூற்றெட்டு அதிகாரங்கள் கொண்ட ஆயிரத்திற்குமேற்பட்ட இரண்டடிக் குறள்கொண்ட இந்நூல் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக என் உள்ளத்துள் புதைந்துகிடந்த சமுதாயப் பார்வைகள் தான். இது திருக்குறள் போன்று எழுதப்பட்டுள்ளது அரசியல் விளம்பரம், பத்திரிகாதர்மம்போன்ற இளைய தலைமுறையினருக்கு ஏற்ற நல்ல கருத்துக்களையும் சொல்லி இருக்கின்றேன் என்றார் அவர்.

"வளரும் இலக்கியங்கள் பற்றி என்ன சொல்கிறீர்கள்"

"புதிய இலக்கியங்கள் மக்களுக்குப் பொழுதுபோக்கை உண்டாக்குவதற்காக மட்டும் எழக்கூடாது என்பது என் கருத்து. அவை நெறி காட்டும் வகையிலும் பயன்படவேண்டும். இந்த 'புதிய அலை'ப் போக்கில் எழுகின்ற கவிதை, கதை நவீனங்களை அறிவலகத்தால் அங்கீகரிக்க முடிவதில்லை. காரணம் மனிதனுடைய அடிமனதில் வேரூன்றிக்கிடக்கின்ற பால் உணர்வு வேட்கை ஒன்றையே அவை பயன்படுத்துகின்றன. மனித உள்ளத்தின் 'வக்கிரங்கள்', 'கோணல்' 'கிலுக்கல்கள்' இலக்கிய மதிப்பைப் பெற்றுவிட முடியுமா என்ன? என்றும் முடியாது. நம்முடைய நாட்டிலும் சரி, மற்றும் நாடுகளிலும் சரி அறிஞர்கள் சமுதாயத்தின் நல்வாழ்வையே நாடுகிறார்கள் ஆகவே வளரும் இலக்கியங்கள் குறிப்பாக நவீனங்கள், கவிதைகள். கடிதங்கள் முதலியவை இந்த அடிப்படைக் கருத்தை ஆதார சுருதியாகக் கொண்டு மலரவேண்டும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

"தமிழ் நாட்டின் முதலமைச்சர் மேற்கொண்டுவரும் எழுத்துச் சீர்திருத்தம்பற்றி என்ன சொல்கிறீர்கள் என கேட்டபோது அவர் கூறியதாவது:-

அண்மையில் தமிழ் எழுத்துக்களைத் தமிழக அரசு சீர்திருத்தம்செய்து வெளியிட்டுள்ளது திருத்தங்கள் முழுமையானதல்ல. ஆனால் இந்தத் திருத்தங்கள் வரவேற்கப்படக் கூடியவையே. ஐ. ஔ

[7ம் பக்கம் பார்க்க]

### அனலைதீவு முருகன் கும்பாபிஷேகம்

ஸ்ரீ விராட் புருடனது சரீரமாகிய பிரமாண்டத்தின் இடைநாடி ஸ்தானமென்று சாந்தோக்கியம் முதலிய உபநிடதங்களிலே எடுத்தோதப் பெற்றதும், சமயகுரவராலும், பிறராலும் வியந்துகூறப்பெற்றதுமாகிய இலங்கைத்தீபத்தின் திலகம்போல் சிறப்புற்று விளங்கும் அனலைதீவில் அரசன் புலம் என்னுமிடத்தில் கோவில் கொண்டெழுந்தருளிய முருகப் பெருமானுக்கும் ஏனைய பரிவாரமூர்த்திகளுக்கும் இன்று வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகவிழா நடைபெறவுள்ளது

கும்பாபிஷேகத்தை ஊரெழு சிவாகம வித்தியாபூஷணம் சிவஸ்ரீ பா. வைத்தியநாதக் குருக்கள் தலைமையில் ஐந்து குருமார் நடாத்திவைப்பர்.

—எஸ். கே. என்

### அராலி உற்சவம்: விசேஷ பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமையுடன் முடிவடைகின்றது. காலை வேள்வித் திருவிழாவும் நண்பகல் கொடியிறக்கு வைபவமும் நடைபெறும். அம்பாள் அடியார்களின் வசதியை முன்னிட்டு விசேஷ பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

[அ]

### கோண்டாவில் சிவகாமி அம்பாள் நாளை தேர்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தில இன்றிரவு சப்பரத் திருவிழாவும் நாளை சனிக்கிழமை ரதோற்சவமும், ஞாயிற்றுக்கிழமை மாலை தீர்த்தோற்சவமும் நடைபெறவிருக்கின்றன.

வைத்திலிங்கம்ஸ்

0 உறுதியானதும்
0 நீடித்து உழைப்பதும்
0 தன்னிகரற்றதுமான

'றிவர்' பிராண்ட்
கல்வனைஸ்ட் இரும்புத் தகடுகள்
பிரதான விநியோகஸ்தர்களும் இரும்புப் பொருட்கள் விற்பனையாளர்களும்

என். வைத்திலிங்கம்
நிறுவனத்தார்

450, பழைய சோனக தெரு,
கொழும்பு--12
தொலைபேசி: 33143-4

கிளை: 138, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530

ஆடு, பசு, எருது, கோழி முதலிய ஒன்றுமறியாத அப்பிராணிகளை நோய் தீர்க்க வேண்டிக்கோயிலுக்கு நேர்த்தி செய்பவர்களுக்குக் கலாநிதி பண்டிதமணி ஓர் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார். அவ்வேண்டுகோள் முழுவிபரம் இங்கு தரப்படுகிறது!

# கொலைப்பாவம் செய்யும் ஆலயங்களுக்கு உயிர்த்தானம் செய்யாதீர்

## பண்டிதமணி வேண்டுகோள்

இறைவன் ஆன்மாக்களுக்கு அருள் செய்வதற்காக எழுந்தருளியிருக்கும் திருநிறைந்த இடங்கள் ஆலயங்களாகும். அவ்வாலயங்கள் எப்போதும், சற்கருமத்தை வளர்ப்பனவாயும் அமைதல் வேண்டும். அப்படி அமைந்தாலேயே ஆன்மாக்கள் இறைவனுடன் லயமடைய ஏதுவாகும். அப்படி லயமடைந்தாலேயே ஆலயமென்ற சொல்லின் உட்பொருளும் பொருத்தமுடையதாயமையும். ஆன்மாக்கள் இறைவனுடன் லயமடைவதையே ஆலயங்கள் குறிக்கோளாகக் கொள்ளுதல் வேண்டும் அங்ஙனம் நற்குறிக்கோளை அடையாமல் ஆலயகர்த்தாக்களும், தருமகர்த்தாக்களும் தாம் தாம் விரும்பியவாறு ஆலயங்கள் மூலம் பண வருவாயையே எதிர்பார்த்துக்கொண்டு, அறத்துக்கு விரோதமான செயல்கள் மூலம் வருவாயைப்பெறுதல் எத்துணைக் கொடுமை! கொடுமை!! இக்கொடுமைகளைக் கண்டுங்கேட்டும் வாளாவிருத்தலும் அறமாகாது ஆதலாற்றான் ஆலயங்களை உயிர்ப்பலி செய்விப்பதற்கு நிலைக்களமான அல்லது உடன்பாடான அந்தை ஒத்தாசைசெய்கிற இடமாக இருத்தலாகாதென்று அறிவுடையவர்கள் கூறுவார்கள். அவர்கள் கூற்று முழுவதும் உண்மையே!

### கொலைசெய்தவருடன் பழகியவரும் பாவிகளே

பொய், கொலை, களவு, கள், காமம் ஆகிய ஐந்தும் சைவ சமயிகளால் விலக்கப்பட்ட மகாபாதகங்களாகும். இவற்றுள் கொலைப்பாவம் மிகக் கொடியது. அதுவும் ஆலயங்கள் மூலம் கொலைசெய்ய ஏதுவாதல் மகாகொடுமையாகும். கொலைசெய்ய ஏவியவரும், கொலைசெய்யக்கண்டும், அதனைத் தடுக்காதவரும், ஒருவன் செய்த கொலையை மறைத்து அவனை இராசதண்டனைக்குத் தப்புவித்தவரும், கொலை செய்தவரோடு பழகினவரும் கொலைப்பாவிகளே ஆவார்கள் இந்த ஐந்துவகையினரும் ஒரே சமமான பாவிகளே. இவர்களுள் அதுவும் ஆலயத் தொடர்புடன் இக்கொலைப் பாவத்துக்கு ஆளானவர்கள் மிகக்கொடும்பாவிகளே! இக்கொடும்பாவிகளுக்கு எவ்வித ஈடேற்றமும் ஏற்படவேமாட்டாது. உண்மை உண்மை! இக்கொலைப்பாவிகள் அளவற்ற காலம் கௌரவம் முதலிய பல நரகங்களிலே கிடந்து வருந்தி பின்பும் பூமியிலே பிறந்து குட்டம், ஈளை, காசம், பெருவியாதி, நெருப்புச்சுரம், பிளவை முதலிய பலகொடிய நோய்களினாலே வருந்துவர். இது சத்தியம்! சத்தியம்!! எனவே அரிய மானிடப் பிறவியை எடுத்தவர்கள், இக்கொடுமைகளுக்கு இலக்காகாமல் இருத்தல் வேண்டும் அங்ஙனம் இலக்காகாமல் இருக்க வேண்டுமானால் முன்னே கூறிய ஐந்துவிதமான கொலைப்பாவங்களுக்கும் இடமளியாது வாழுதல் வேண்டும்.

### நேர்த்தி கொடுக்கும் அப்பிராணிகள்

இலர் தங்களுக்கும் தங்களோடு தொடர்புடையவர்களுக்கும் கொடிய வியாதிகள் சில ஏற்பட்டால் கோயில்களுக்கு ஆடு, பசு, எருது கோழி முதலிய உயிர்களை நேர்த்திக்கடன் செய்து கொடுத்து விடுகிறார்கள். அவர்கள் கொடுக்கும் இவ்வுயிர்கள் ஒன்றும் அறியாத அப்பிராணிகள். அப்பிராணிகளாகிய இப்பிராணிகளைக் கோயில்களில் வைத்துப் பாதுகாத்தலே தர்மம். கொடுத்தவருக்கும் தானப்பயன் இதனைவிட்டு, இப்பிராணிகளாகிய அப்பவிகளைக் கோயில் அதிகாரிகளும் தருமகர்த்தாக்களும் கொலை செய்பவனாகிய கொலைக்காரனுக்கு விற்று விடுகிறார்கள். இப்படி விற்பவர்களுக்கும் கொலையுடன் பட்ட கொலைப்பாவம் உண்டு என்பதை இவர்கள் உணருதல் நன்று. இவர்களால் விற்கப்பட்ட பசு முதலாகிய பிராணிகள் கசாப்புக் கடைக்காரரால் கொலைசெய்யப்பட்டுபுலாலுண்ணுபவர்களால் உண்ணப்படுவது பிரத்தியட்சம். இதனை மனச்சாட்சிப்படி நன்குணர்ந்தும் உணராதவர்களைப் போலக் கோவிலதிகாரிகள் கோவிலுக்குத் தானம் செய்யப்படும் பிராணிகளைக் கசாப்கடைக்காரருக்கு விற்று அதனால் வரும் பணத்தைத் திருப்பணிக்கென எடுக்கலாமா? இப்பணத்தால் செய்யப்படும் திருப்பணி திருப்பணியாகுமா? ஆலோசித்துப் பாருங்கள்! கொலைப்பாவத்துக்கு உடன்பட்டமையால் வந்த பணம், கொலைப்பாவத் தண்டனையை தருமேயொழிய அறத்தை வளர்க்காது சற்று ஆலோசியுங்கள் பகுத்தறிவை உபயோகியுங்கள் கொலைப்பாவத்தை ஒழியுங்கள். இக்கொலைப் பாவஞ்செய்யுங் கோயில்களுக்கும் பொதுசனங்களே எவ்வித உயிர்களையும் தானஞ் செய்யாதீர்கள்! கொலைப்பாவம் நடக்கிறது என அறிந்தும் அவ்வாலயங்களுக்கு உயிர்களைத் தானஞ் செய்வதால் ஆகும் பயன் கொலைப்பாவப் பயனேயாகும். இஃது முக்காலும் சத்தியம்! சத்தியம்!

> "கொல்லான் புலாலை மறுத்தானைக் - கைகூப்பி
> எல்லா வுயிருந் தொழும்"
> - திருவள்ளுவர்

> "கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்க
> எல்லார்க்குஞ் சொல்லுவதேன்
> இச்சை பராபரமே"
> - தாயுமான சுவாமிகள்

# "கைதடியில் சமாதா[னம்] நிலைநாட்டப்படு[ம்]"

## தூதுக்குழுவிடம் ஏ. எ[...]

[யாழ்ப்பாணம்]

கைதடியில் சமாதானத்தை நிலைநாட்ட உடனடி நடவடிக்கையை மேற்கொள்ளுவதாக உதவிப் பொலிஸ் அதிபர் உறுதியளித்துள்ளார்.

கைதடி சாதிக்கலவரம் சம்பந்தமாக உதவிப் பொலிஸ் அதிபரைச் சந்தித்த வெகுஜன இயக்கத்தினர் கைதடியில் சாதியின் பெயரால் நடைபெற்றுவரும் அநியாயங்களை எடுத்துக்கூறி இதற்கு உடனடித்தீர்வுகாண ஆவன செய்யும்படி வேண்டுகோள் விடுத்தனர்.

உதவிப் பொலிஸ் அதிபரைச் சந்தித்த குழுவில் வெகுஜன இயக்கத்தலைவர் திரு. எஸ். சி. என். நாகரெ[...] கச்செயலாள[...] பையா ஆகி[...] தனர் இக்குழு[...] யைத் தெ[...] சமாதானத்[...] உடனடி நட[...] தாக உதவிப் [...] பர் குழுவினரி[...] துள்ளார்.

## நயினையில் சங்காபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

நயினாத்தில்லைவெளி பிடாரி அம்பாள் வைகாசி விசாக தி அஷ்டோத்திர கலச மகா சங்காபிஷேக விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் நடைபெறவுள்ளது.

சங்காபிஷேகத்தை பிரதிஷ்டா மகாகும்பாபிஷேக சிரியாபாக வியாகரண மணி நயினை முத்துக்குருக்கள் பரமசாமிக்குருக்கள் நிறைவேற்றி வைப்பார். [இ-அ]

## சுன்னாகம் அந்தோனியார் உற்சவம்

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் புனித அந்தோனியார் திருநாள், கடந்த 4-ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

பங்குத் தந்தை அருட்திரு பி. சூசைப்பிள்ளை அடிகளார் தலைமையில் அருட்திரு ஏ. பிலிப் அடிகளார் தினமும் காலையில் திவ்விய பலிப்பூசையும், மாலை வழிபாடுகளும் நடாத்தி வருகிறார்.

12-ம் திகதி விசேஷ வழிபாடுகளும், 13-ம் திகதி காலை 7 மணிக்கு திருநாட் பாடற் பூசையும், அந்தோனியாரின் திருச்சொரூப சுற்றுப்பிரகாரமும் நடைபெறும். [கெ]

## மினுவாங்கொடை பொருட்காட்சியில் கந்தபுராணமும் 'பனம்பொருளும்

[மினுவாங்கொடை]

மினுவாங்கொடையில் நடைபெற்ற புராதனப் பொருட்காட்சிச்சாலையில் இலங்கை வாழ் மக்களின் கலாச்சாரப் பண்பாட்டை எடுத்துக்காட்டக்கூடியமுறையில் காட்சிப் பொருட்கள் அமைந்திருந்தன. இவை பண்டைக்காலத்தில், விஞ்ஞான கணித அறிவை எவ்வளவு தூரம் பெற்றிருந்தன என்பதைச் சித்தரிப்பனவாயிருந்தன. அக்கால மக்கள் மிகவும் நுட்பமாக, பணச்செலவின்றி, சிக்கனமாக தளபாடங்களையும், கருவிகளையும், ஆயுதங்களையும் செய்து உபயோகித்தனர் என்பதை இப்பொருட்கள் எடுத்துக் காட்டின.

தமிழ்மக்கள் பனையைப் பயன்படுத்தி மிகவும் சிக்கனமாக வாழ்ந்தார்கள் என்பதை எடுத்துக்காட்டக்கூடிய பொருட்களை வளர்ந்தோரி கல்வி அதிகாரி திரு. சி. எஸ். சுப்பிரமணியம் பொருட்காட்சிச்சாலையில் விளக்கம் அளித்தார். மாவிட்டபுரம் ஆதீனகர்த்தா கொடுத்துதவிய கந்தபுராண ஏட்டுப் பிரதிகள் பார்வையாளர்களுடைய கண்களைக் கவர்ந்தன. கல்வி அமைச்சர் சமய முறைப்படி அவ்வேடுகளுக்கு வணக்கம் செலுத்தி விபூதியையும் நெற்றியில் அணிந்து கொண்டார்.

சுற்றுடலுக்கேற்றவாறு சூழலைப்பயன்படுத்திவாழ்ந்துவந்த மக்கள் தொழில் நுட்பக் கல்வி மூலம் பாவனைப் பொருட்களில் மாற்றத்தை ஏற்படுத்தி போதிய வசதிகளைப்பெற்று வாழக்கூடியதாக இருக்கின்றது எனவே மூதாதையர் இட்ட வித்தில்தான் சுபிட்சம் தங்கியுள்ளது என்று கல்வி அமைச்சர் தமது பேச்சில் குறிப்பிட்டார். [அ]

## சிறுப்பிட்டி கொலைவழக்கு

# விசாரணை நடுவில் எதிரி விடுதலை

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி கொலை வழக்கில் எதிரி விசாரணை நடுவில் விடுதலை செய்யப்பட்டார்

இவ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது

இவ்வழக்கில் 77 நவம்பர் 12ந் திகதி சிறுப்பிட்டியில் சின்னத்தம்பி சுந்தரலிங்கம் என்பவர் செல்லப்பா சின்னப்பாவை கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ச. தம்பிரத்தினம்சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம்சட்டத்தரணிபெல ஸ்ரீரங்கன் ஆகியோர் ஆஜரானார்கள். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். தவராஜா ஆஜரானார்.

விசாரணை நடுவில் ஜூரி சபையினர் சாட்சிய முரண்பாட்டினால் விசாரணையைத் தொடர விருப்பமில்லையென தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிபதி எதிரியை விடுதலை செய்தார். (க-அ)

## சு[...] பிறந்[...]

(யாழ்[...])

குருமகா ச[...] நாராயண [...] 59-வது பி[...] மாதம் 9-ம் [...] வீதியிலுள்ள [...] கோவிலில் [...] றது.

அர்ச்சகர் [...] வலிங்கம், இ[...] குகளை செ[...] மதத்தவரும் [...] தலங்களில் [...] பத்தி முதலி[...] கலாமென்று [...] டுள்ளது.

## "வள[...] கல்[...] அ[...]"

[யாழ்[...]]

கோப்பாய் [...] முன்னேற்ற[...] தோர் கல்[...] பற்றி விள[...] கூட்டத்தை [...] இதில் வளர்[...] அதிகாரி தி[...] மணியம் இ[...] வெத்துவம் [...] னார்.

ஆண்களுட[...] தமது ஒய்வு[...] துறைகளிலு[...] அறிவைப் [...] யாகவும் க[...] வாழ்வதற்கு [...] வித்திட்டம[...] பல நாடுகள[...] வரும் திட்[...] ரணம்காட்டி[...] மணியம் பே[...]

இருபாலை[...] னேற்றச்சங்[...] செய்த கூட்[...] சுப்பிரமணி[...] கல்வியின் [...] பேசினார்.

## பால்மா[...] செய்[...]

[ச[...]]

சங்கானை, [...] ட்பு, மால[...] ப நோக்க[...] பங்கிற்கு உ[...] உணவுகளை [...] விற்பனை செ[...] என ஈசங்[...] திடீர் விஜ[...] வட வி[...] அதிகாரிகள் [...] பிறப்பித்துள்[...]

## வீடு [...]

[பண்[...]]

பனிப்புலத்[...] தீக்கிரை [...] தொடர்பாக [...] களைப் பொ[...] கின்றனர்.

சில வருட[...] சிறைச்சாலை [...] தினரால் [...] மூலம் கட்டி[...] பனிப்புலத்[...] வெற்றிவேலு[...] வீடே இவ்வ[...] கப்பட்டுள்ள[...] வெற்றிவேலு[...] கவதி என்[...] பொலிஸ் நி[...] முறைப்பாட்[...]


மேசன் வேலைக்கான சீமெந்து



அதிக பட்சி

★ வேலை நயம்

★ குழைமம்

★ ஒட்டுந் தன்மை

மேசன் வேலைக்கான சீமெந்து

மனை நிர்மாணத்துறையில் ஒரு நவீன அம்சமாகும். இது சிக்கனமானது, மலிவானது. அமெரிக்க சீமெந்துச் சங்கத்தின் நுணுக்கமான தர நிர்ணயத்துக்கு அமைவானது. இதனை போர்ட்லண்ட் சீமெந்தைப்போலவே பாவிக்கலாம். சீமெந்து / மணல் விகிதாசாரம் போர்ட்லண்ட் சீமெந்துக்குப் போலவேயாகும்.

மேசன் வேலைக்கான சீமெந்தைக் கொண்டு கட்டிடச் செலவைக் குறையுங்கள்

● கொங்கிறீட் வேலைக்கு பயன்படுத்தப்படுவதற்கல்ல.

மேசன் வேலைக்கான சீமெந்தின் விலை 50 கி. கிரும் பை.

புத்தளம் அல்லது காங்கேசன்துறை தொழிற்சாலையிலிருந்து ரூபா 14/90

காலி தொழிற்சாலையிலிருந்து ரூபா 17/80

இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம்,

தபால் பெட்டி - 1382, சுதந்திர சதுக்கம், கொழும்பு—7, தொலைபேசி: 95628 95801—4

ாதானம்
டும்''
எஸ். பி.

ாகரெத்தினம், இயக்
லாளர் திரு. எஸ். சுப்
ஆகியோர் சென்றிருந்
க்குழுவினர் நிலைமை
தெளிவுபடுத்தியதும்
னத்தை நிலைநாட்ட
நடவடிக்கை எடுப்ப
தவிப் பொலிஸ் அதி
னரிடம் உறுதியளித்
ர். [கொ]

சுவாமி
றந்ததினம்
யாழ்ப்பாணம்)
ா சந்திரானம் லக்ஷ்மி
ண சுவாமிஜியின்
பிறந்ததினம் இம்
9-ம் திகதி நாவலர்
ள்ள அன்னசத்திரம்
ல் நடைபெறவிருக்கி

சகர் புலவர் நம. விஸ்
, இதற்கான ஒழுங்
செய்துள்ளார். பிற
வரும் தமது வாசஸ்
ல் மெழுகுதிரி, ஊது
தலியனவுடன் தங்கி
ன்று அறிவிக்கப்பட்
. [க-ன]

வளர்ந்தோர்
கல்வியின்
அவசியம்''
[யாழ்ப்பாணம்]
பரய் வடக்கு கிராம
ற்றச்சங்கம் வளர்
கல்வியின் அவசியம்
விளக்குவதற்காக ஒரு
தை ஒழுங்குசெய்தது.
வளர்ந்தோர் கல்வி
ி திரு எஸ் சுப்பிர
இக் கல்வியின் முக்
வம் பற்றி விளக்கி

களும் பெண்களும்
ஓய்வுநேரத்தை சகல
ிலும் பயன்படுத்த
வப் பெற்று ஒற்றுமை
கட்டுப்பாடாகவு
தற்கு வளர்ந்தோர் கல்
ட்டம் அவசியமென்பதை
ாடுகளில் நடைபெற்று
திட்டங்களை உதா
ாட்டி திரு சுப்பிர
ம் பேசினார்.
பாலைக் கிராமமுன்
ச்சங்கம் ஒழுங்கு
கூட்டத்திலும் திரு.
மணியம் வளர்ந்தோர்
ன் அவசியம் பற்றிப
ர். ( )

்மா விற்பனை
சய்யத்தடை
[சுன்னாகம்]
ாகம், பண்டத்தரி
மானிப்பாய் ஆகிய
கூ. சங்கங்களுக்கு விற்
ு வந்துள்ள பாமா
களை தற்காலிகமாக
செய்ய வேண்டாம்
ூசங்கங்களுக்கு
விஜயத்தை மேற்கொ
விலைக்கட்டுப்பாட்டு
ரிகள் தடைஉத்தரவு
த்துள்ளனர்.

வீடு தீக்கிரை
[பண்டத்தரிப்பு]
ப்புலத்தில் வீடு ஒன்று
ரையாக்கப் பட்டது
ர்பாக இரு சந்தேகநபர்
பொலிசார் தேடிவரு
ர்.
வருடங்களுக்குமுன்னர்
சாலை நலன்புரிச் சங்கத்
ல் சிரமதானத்தின்
கட்டிக்கொடுக்கப்பட்ட
லத்தைச் சேர்ந்த
வேலு என்பவரின்
இவ்வாறு தீக்கிரையாகி
ந்துள்ளது இதுபற்றி
வேலுவின் மனைவி இல
என்பவர் சுன்னாகம்
ஸ் நிலையத்தில் செய்த
பாட்டைத் தொடர்

# யாழ். நகரில் முஸ்லிம் கடைகளை தமிழர்களே தீ வைத்து கொள்ளை அடித்தனர் என ஏ.எஸ்.பி.கூறியது சரி

## சன்சோனி கமிஷன் முன் முன்னைய யாழ். தலைமையக இன்ஸ்பெக்டர்

(கொழும்பு)

யாழ். நகரில் முஸ்லிம் வர்த்தகர்களின் கடைகள் ஒதுக்கி வைக்கப்பட்டு, தமிழர்களாலேயே அவை தீவைக்கப்பட்டு கொள்ளை அடிக்கப்பட்டன என்று உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் கூறியது சரியென்றே நான் சொல்கின்றேன்.

இவ்வாறு நேற்று முன்தினம் சன்சோனிக் கமிஷன் விசாரணையின்போது சாட்சியமளித்த முன்னாள் யாழ் பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டர் திரு. கொட்பிறி குணசேகரா, தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. லெஸ்லி பாட்லெட்டின் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் கூறினார்.

திரு. குணசேகரா தமது சாட்சியத்தில் தொடர்ந்து கூறியதாவது:

யாழ். நகரிலிருந்த சிலைகளையும் ஏனைய சின்னங்களையும் தமிழ் இளைஞர்களே கலவரகாலத்தின்போது உடைத்தார்கள் முஸ்லிம் வர்த்தகர்களின் கடைகள் ஒதுக்கிவைக்கப்பட்டு தமிழர்களாலேயே அவை தீக்கிரையாக்கப்பட்டன என்றும் கொள்ளையடிக்கப்பட்டன என்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெனுப் நாதின் கூறியவை சரியானவையே

அப்துல் கரீம் என்பவர் தமது சாட்சியத்தில் பழைய சந்தைக் கட்டிடத்தில் தீ ஏற்பட்டிருப்பதாகவும் அதனால் கடைகளைப் பூட்டும்படியும் யாழ்.எம்.பி யோகேஸ்வரன், கோப்பாய் எம். பி. கதிரவேலுப்பிள்ளை, வண்ணை ஆனந்தன் ஆகியோர் ஆலோசனை கூறியதாகவே கூறியுள்ளார். முஸ்லிம் வர்த்தகர்களின் பெயர்ப்பட்டியலை யார் தயாரித்தார் என்று எனக்குத் தெரியாது. இனரீதியிலோ அல்லது சாதிஅடிப்படையிலோ புகார்களைப்பதிவு செய்வதற்கு பொலிஸ் நிலையங்களில் விசேட புத்தகங்கள் எதுவுமில்லை.

16-ம் திகதி காலையில் 9-45 மணியளவிலேயே பழைய சந்தையில் உள்ள கட்டிடங்களில் தீப் பிடித்திருப்பதை முதன் முதலாகப் பார்த்தேன். வைத்தியசாலைப் பகுதிக்கே பொறுப்பாகச் சென்ற நான் அன்றுமாலைவரை நகரத்தில் ரோந்தில் ஈடுபட்டிருந்தேன் இடையில் பொலிஸ் நிலையம் சென்றேனா என்பது ஞாபகத்தில்லை.

### என் இஷ்டப்படியே அனுராதபுரம் அனுப்பினேன்

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த கான்ஸ்டபிள் பண்டாராவை என் இஷ்டப்படியே அவரது விருப்பத்தின் பேரில் அனுராதபுரத்திற்கு அனுப்பி வைத்தேன். அவருக்கு யாழ்ப்பாணத்தில் ஒழுங்காகச் சிகிச்சை அளிக்கப்படவில்லை என்பது பற்றி எனக்குத் தெரியாது. அதுபற்றி அவர்புகார் செய்திருக்கலாம். அவர் அனுராதபுரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டது பற்றியோ யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலிருந்த விவகாரமோ பற்றி எதுவித குறிப்புக்களும் இல்லை.

''காயமடைந்த பண்டாரா என்பவரை பொலிசார் கடத்திச் செல்லவில்லை. அழைத்துச் சென்றனர். ஆகஸ்ட் 16-ந் திகதி இன்ஸ்பெக்டர் குருசாமி காலை 9-30 மணிக்கு ஆஸ்பத்திரிக்கு வந்ததாக கேள்விப்பட்டேன். 14-ந் திகதி காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட அன்று இரவு 11 மணியளவில் சென்று பார்த்தேன். அதன் பிறகு 16-ந் திகதி நான் காயமடைந்தவரைப் பார்த்தேன்.

காயமடைந்தவருக்கு வலி ஏற்பட்டதாம் எஸ் பி திரு வியனகேயுடன் தொடர்பு கொண்டு காயமடைந்தவரை அனுராதபுரம் அனுப்ப ஏற்பாடு செய்தேன் திரு வோல்டன் வியனகே என்ற எஸ் பி எப்படி இங்கு வந்தார்? யார் அவரை அழைத்தது என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது திரு ஸ்டான்லி சேனநாயகா அழைத்திருக்கலாம் வோல்டன் வியனகேயை யாழ் நகரில் இருக்கச் சொன்னது பற்றி எனக்குத் தெரியாது [இ]

## ஓய்வூதியம் பெறுவோர் குறைகள் தீர்த்துவைக்க சங்கம் முடிவு

[உடுப்பிட்டி]

ஓய்வூதியம் பெறுவோர்களின் குறைகளை ஏனைய சங்கங்களின் உதவியுடன் அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு தீர்த்துவைப்பதென இலங்கை அரசினர் ஓய்வூதியம் பெறுவோர் சங்க வடமராட்சிக் கிளை ஐந்தாவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது

இப் பொதுக் கூட்டம் வதிரி ஸ்ரீபரமானந்த ஆச்சிரம மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு க. தாமோதரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது செயலாளர் திரு க. இராசசிங்கம் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் ஓய்வூதியம் பெறுவோரின் பிரச்னை பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் எம். பி. பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியதைப் பற்றியும் எடுத்துக் கூறினார்.

சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:-

தலைவர்: திரு வே. சோமசுந்தரம், காரியதரிசி திரு க. இராசசிங்கம், உபதலைவர்கள்

[6-ம் பக்கம் பார்க்க]

## நாளை ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை மேற்கு அரசடி விநாயகர் இந்து இளைஞர் மன்றத்தினரின் பதினைந்தாவது ஆண்டுவிழா நாளை சனிக்கிழமை மாலை அரசடி விநாயகர் ஆலய முன்றலில் மன்றத் தலைவர் செல்வன் சு. லோகநாதன் தலைமை நடைபெறவிருக்கிறது.

மேற்படி விழாவில் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை சிறப்புவிருந்தினராகவும், யாழ் மாநகரசபை முதல்வர் திரு. இராசா விசுவநாதன் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

கவியரங்கம், வழக்காடு மன்றம், நாடகம் ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [கொ-அ]

## இன்று உற்சவாரம்பம்

[சரவணை]

தீவுப்பகுதியில் பிரசித்தி பெற்ற ஆலயமான புளியங்கூடல் செருந்தனைப்பதி ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய மகோற்சவ கொடியேற்றத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் நடைபெறுகிறது. [அ]

## சாந்திக மகோற்சவம்

[யாழ்ப்பாணம்]

வண்ணை கிழக்கு சந்தர் மடம் சித்திவிநாயகர் கோவில் சாந்திக மகோற்சவம் இம்மாதம் 13-ந் திகதி புதன் கிழமை ஆரம்பமாகி பன்னிரண்டு தினங்கள் வரை நடைபெறவுள்ளது. [கெ-அ]

## சப்பரத் திருவிழா

[சரவணை]

சரவணை - நாரந்தனை ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மகோற்சவ ஒன்பதாம் நாளாகிய இன்று வெள்ளிக்கிழமை சப்பரத் திருவிழா நடைபெறும்.

இரவு நடைபெறும் இன்னிசை நிகழ்ச்சிகளை அடுத்து பெரியசப்பரத்தில் சுவாமிவீதி வலம் வருவார். நாளை சனிக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறும். [அ]

மாரீசன்கூடல்

## இரு இளம் மீனவர்கள் கடலுக்குப் பலி?

### கட்டுமரம் கரை ஒதுங்கியுள்ளது

[பண்டத்தரிப்பு]

அதிகாலையில் இயந்திரம் பூட்டியகட்டுமரம் ஒன்றில் மீன்பிடிக்கச் சென்ற இரு இளம் மீனவர்கள் கடலுக்குப் பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இவர்கள் சென்ற யந்திரம் பூட்டிய கட்டுமரம் கடல் அலைகளினால் அடித்துச்செல்லப்பட்டு கரைஒதுங்கியுள்ளது இது பற்றி சங்கானைப் பொலிசாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்துப் பொலிஸார் சார்ஜண்ட் திரு. குலசிங்கம் தலைமையில் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணை நடாத்தினர். இளவாலைப் பகுதியிலுள்ள மாரீசன் கூடல் என்னுமிடத்தைச் சேர்ந்த அந்தோநி பாலு, சத்தியானந்தன் ஆகிய இருவரையும் சந்தேகத்தின் பேரில் பொலிசார் தேடி வருகின்றனர்.

லிப்பிள்ளை ஸ்டீபன் சகாயநாதன் [வயது 23], தேவசகாயம் மரியதாஸ் [வயது 24] ஆகிய இருவருமே இவ்வாறு கடலில் காணாமல் போனவர்களாவர். இவர்கள் இருவரும் காற்றினால் தள்ளப்பட்டு கடலில்விழுந்து இறந்திருக்கக்கூடுமென பொலிசார் கருத்துத் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக கடற்படையினரும் இராணுவத்தினரும் கூட்டாக கடலில் தேடுதல் நடாத்திவருகின்றனர். [அ]

## யாழ். மாநகரசபை முதல் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகரசபையின் முதலாவது கூட்டம், நகர முதல்வர் திரு. ஆர் விஸ்வநாதன் தலைமையில் இன்று காலை நடைபெறவிருக்கின்றது.




## கானாவின் முன்னாள் ராணுவ தலைவர் காவலில்

அக்ரா, ஜூன் 7 கானாவில் புரட்சி மூலம் இராணுவ ஆட்சியைக் கைப்பற்றிய விமானப்படைக் குழு முன்னைய இராணுவத் தலைவர் ஜெனரல் அக்குபோவையும் மற்றும் அவரது சகாக்கள் சிலரையும் கைதுசெய்துள்ளனர் என அறிவிக்கப்பட்டது.

முன்னைய இராணுவ ஆட்சியாளர் சரணடைய வேண்டும் என்றும் சரணடையாத பட்சத்தில் பெரும் விளைவுகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என்றும் 10 பேர் கொண்ட புதியபுரட்சிச்சபை நேற்றுமுன் தினம் வானொலிமூலம் அறிவித்திருந்தது.

எது எவ்வாறு இருப்பினும் கானாவில் இம்மாதம் 18-ம் திகதி பொதுத்தேர்தல் நடைபெற்று ஜூலை மாதம் 1-ம் திகதியளவில் அங்கு மக்கள் ஆட்சி மலரும் என்று புரட்சி அரசு அறிவித்துள்ளது. [இ]

## ஷாவின் அரண்மனைகள் காட்சிச்சாலையாகிறது

தெஹ்ரான், ஜூன் 7 முன்னாள் ஈரான் மன்னரும் அவரது குடும்பத்தினரும் பாவித்து வந்த அரண்மனைகள் யாவும் தேசிய அரும்பொருட் காட்சிச்சாலைகள் ஆகும் என்று சாணிய புரட்சி அரசு அறிவித்துள்ளது.

மன்னரின் குடும்பத்தினர் பாவித்த பூங்காக்களை பொது மக்களுக்கென திறந்துவிடுவதென்றும் ஈரான் அரசு தீர்மானித்துள்ளது. [இ]

## இடிஅமினின் உபஅதிபர் சூடானில் கண்டுபிடிப்பு

நைரோபி, ஜூன் 7 முன்னாள் உகண்டா அதிபரின் நெருங்கிய சகாவும் முன்னாள் உபஜனாதிபதியுமான ஜெனரல் முஸ்தபா அட்ரிஸி சூடானில் உள்ள அகதிகள் முகாமில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

உகண்டாவின் புதிய அரசுக்கு எதிராக இடிஅமினுடன் சேர்ந்து தாம் போராட எண்ணியிருக்கவில்லை என்றும் இடிஅமினை எவரும் இன்னமும் கைது செய்யாதமையினால் இடிஅமினே இன்னமும் உகண்டாவின் ஜனாதிபதி என எண்ணுவதாகவும் ஜெனரல் அட்ரிஸி தெரிவித்தார்.

59 வயதான இவருடன் இவரது 3 மனைவிகளும் 36 பிள்ளைகளும் இருக்கக் காணப்பட்டனர்.

14 மாதங்களுக்கு முன்னர் கார் விபத்து ஒன்றில் தமது கால் ஊனமானதன் காரணமாகவே தம்மால் உகண்டா திரும்பமுடியவில்லை என்றும் அவர் பத்திரிகையாளரிடம் கூறினார். [இ]

## ஜெகஜீவன்-தட்சர் சந்திப்பு

லண்டன், ஜூலை 7 இந்திய உதவிப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான திரு. ஜெகஜீவன்ராம் நேற்று பிரிட்டனின் புதிய பிரதமர் திருமதி மார்க்கிரெட் தட்சரை லண்டனில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். [இ]

## இன்றைய பலன்

வைகாசிமாதம் 25-ம் திகதி

[வெள்ளிக்கிழமை]

(8-6-1979)

**மேடம்:** சுருடப்பார்வை உங்களை வட்டமிடும், முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள், சிலருக்கு அன்னிய வாசமும் அகால போசனமும் இண்டு.

**இடபம்:** இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கும், இல்லம் பலகலைக் கழகமாக மாறும், அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும், சாஸ்திரவழியாலும் கணிசியம் சேரும்.

**மிதுனம்:** வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம், அவசரப் போக்கினால் ஆபத்துக்கள் விளையும், சிலர் வாழ்க்கையில் பிரிவுத் துயர் வாட்டக்கூடும், சகோதர வழியாலும் சஞ்சலமுண்டு.

**கடகம்:** ஒளிமயமான நாள், ஆலய வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், உங்கள் உற்சாகத்தில் பெற்றோரும் துணைநிற்பர், விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பாக இருக்கும், பெரியோரைப் பேணவும்.

**சிங்கம்:** செய்தொழிலாக்கில் சிறப்படைவதற்கு இடமுண்டு புதிய கண்டுபிடிப்புகளுக்கும் இடம்பெறும், பொறியியலாளர்களுக்கு சிறப்பான தினம், சிலருக்கு அரசினர் விருதும் கிடைக்கலாம், தொடர்புகளிலும் திருப்தி உண்டு.

**கன்னி:** மற்றவர்களின் இன்னல்கள் கண்டு இரக்கம் காட்டுவீர்கள், தாராள குணத்தின் மூலம் தனமும் செலவாகும், புண்ணிய யாத்திரையுமுண்டு.

**துலாம்:** இன்று எதிலும் நிச்சயமற்ற நிலைமை தென்படும், மனதில் விரக்தி மனப்பான்மை தலைதூக்கும், உணர்ச்சி வசப்படுவதால் வேண்டாத விளைவுகள் உருவாகும், மன அடக்கம் நன்று.

**விருச்சிகம்:** முன்னேற்றம் தடைப்படும், குறுக்கு வழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம், எதேச்சாதிகாரப் போக்கால் சிலரைப் பகைத்துக் கொள்ளவும் நேரிடும், அமைதி நன்று.

**தனுசு:** மேடைப் பேச்சாளர்களும் நடிகர்களும் பெரும் புகழ் அடைவார்கள், பொருள் வரவுக்கும் இடமுண்டு, இல்லத்தில் திருப்திகரமான நிலை தென்படும், அந்தஸ்திலும் முன்னேற்றம் உண்டு.

**மகரம்:** அன்னியர்கள் சகவாசம் சங்கடத்தில் மாட்டிவைக்கும், அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் விளையலாம், எதிரிகளின் சூழ்ச்சிகள் மனநிம்மதியைக் குறைக்கும், தொழிலிலும் தடைகள் உண்டு.

**கும்பம்:** திடீர் திருப்பங்கள் ஏற்படும், ஆரம்பத்தில் கடினமாகத் தோன்றிய வைகள் இலகுவில் முடிவடையும், இயந்திரங்களுடன் பழகுபவர்களுக்கு புகழுரை கிடைக்கும். திருப்தியான தினம்.

**மீனம்:** பிள்ளைப்பாசம் உள்ளத்தில் தலைதூக்கும், சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றி காண முடியும், குடும்பத்திலும் பிணைப்புகள் இறுகும், மகிழ்ச்சிகரமான தினம்.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## பூதராசி அம்மன் உற்சவம்

(சுழிபுரம்)

தொல்புரம் கிழக்கு பூதராசி அம்மன் கோயில் வருடாந்த உற்சவம் கடந்த 5ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

தினமும் இரவு அளவையூர் அருட்கவி சி. விநாசித்தம்பி சங்கீத கதாப் பிரசங்கம் செய்து வருகின்றார். (கு)

## "டி சி--10" விமானச் சேவை காலவரையின்றி நிறுத்தம்

### அமெரிக்க அரசு உத்தரவு

வாஷிங்டன், ஜூன் 7 சேவையில் ஈடுபட்டுள்ள சகல டி. சி-10 விமானங்களை காலவரையறையின்றி சேவையிலிருந்து நிறுத்துமாறு அமெரிக்க அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவில் "டி-சி—10" விமான சேவையை நிறுத்திவைக்குமாறு அமெரிக்கசமஷ்டி நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கியதை அடுத்தே அமெரிக்க அரசு மேற்கண்ட உத்தரவை வெளியிட்டது.

அண்மையில் சிக்காகோவில் அமெரிக்க "டி-சி-10" ஜெட் விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதை அடுத்தே பிரயாணி ஒருவர் "டி-சி-10" விமான சேவையை உடன் நிறுத்தும்படி உத்தரவிடுமாறு அமெரிக்க விமானக் கம்பனிகளுக்கு எதிராகத் தொடர்ந்த வழக்கிலேயே நீதிமன்றம் மேற்படி தீர்ப்பை வழங்கியது.

அமெரிக்காவின் உத்தரவை அடுத்து பலவெளிநாட்டு விமானக் கம்பனிகளும் "டி-சி-10" விமானங்களை சேவையிலிருந்து நிறுத்திவைத்துள்ளது. [இ]

அளவெட்டி

## ப. நோ. கூ. ச. உறுப்பினர்

(தெல்லிப்பழை)

அளவெட்டி - மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவு சங்கம் (கிளை 5) கிளைக்குழுத் தேர்தல் சங்கத் தலைவர் திரு க. நாகலிங்கம் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

பின்வருவோர் இக்குழு உத்தியோகத்தர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்; க. பாலசுப்பிரமணியம், உபதலைவர்: செ. சின்னத்துரை, செயலாளர்: இ. செந்திவேல், உறுப்பினர்களாக க. பொ. அருணாசலம், த. சுப்பிரமணியம், ச. வைத்தியநாதன், இ. ஆசை, செ. சிவகடாட்சம், அ. அப்பையா. [ச]

## யாழ்.குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி

[யாழ்ப்பாணம்]

யாழ், பொலிஸ் நிலையத்தில் குற்றத்தடுப்புப் பகுதிப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். சிறீதரன் இம்மாதம் முதல் கம்பஹா பொலிஸ் நிலையத்திற்கு மாற்றலாகிச் சென்றுள்ளார்.

யாழ். குற்றத்தடுப்புப் பகுதிப்பொறுப்பதிகாரியாக யாழ் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு பிரேமதாசா நியமிக்கப்பட்டுள்ளார். (கொ)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

விவசாயிகளுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

"அம்புஷ் 25"

கிருமிநாசினி மூலம் வெங்காயத்தில் பச்சைப்புழுத் தாக்கத்தைக் கட்டுப்படுத்தல்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வெங்காயத்தில் பச்சைப்புழுத்தாக்கம் (SPODOPTERA) மிகவும் மோசமாக உள்ளது. அதற்குத் தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் உடனே எடுக்காவிடில் உங்களது முழுப்பயிரும் நாசமாகிவிடும்.

வெங்காயம் முளைத்த நாளில் இருந்து "அம்புஷ் 25" விசிறுங்கள். தொடர்ந்து 30 நாட்களுக்கு 5 நாட்கள் இடைவெளியில் விசிறுதல் வேண்டும். 30 நாட்களின் பின்னர் 14 நாட்கள் இடைவெளியில் விசிறல் வேண்டும்.

அம்புஷ் 25 பச்சை புழு முட்டைகளை அறவே அழிக்க வல்லது. ஆகவே நீங்கள் தாமதியாது அம்புஷ் 25தை விசிறுங்கள். ஒரு அவுன்ஸ் அம்புஷ் 25 மருந்தை 10 கலன் நீரில் கலந்து பாவிக்கவும்.

இக்கலவையுடன் ஏதாவது ஒரு ஒட்டும் தன்மையுடைய மருந்தினையும் கலந்து விசிறவும். ஒரு கலன் கலவையுடன் ஒரு அவுன்ஸ் ஒட்டும் மருந்தினைக் கலக்கவும்.

"அம்புஷ் 25" மருந்தினை மாத்திரமே பாவியுங்கள். வேறு எவ்வித கிருமிநாசினிகளுடனும் கலக்க வேண்டாம். அம்புஷ் 25தை அதிகாலையிலோ அல்லது மாலையிலோ விசிறவும்.

மேலதிக விபரங்கட்கு தொடர்பு கொள்ளுங்கள் :

CIC

கெமிக்கல் இன்டஸ்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்,

த. பெ. இலக்கம் 352,

கொழும்பு - 1.

நாகம்ஸ் (கன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
கிருஷ்ணகுமாரி
ஆனந்தன்
நாகமலை அழகி

வெஸ்லி
பருத்தித்துறை
தினசரி 6-30, 9-30
ரஞ்சன்- எம். கே. ராதா
டி. ஆர். ராஜகுமாரி
சந்திரலேகா

ராஜா — தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர் — எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
சௌகார் ஜானகி நடித்த
ஒளிவிளக்கு
புதிய பிரதி ஈஸ்ட்மன்கலர்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) — தினசரி 3-30, 6-30 & 9-45; சனி, ஞாயிறு 10-30, 2-30, 6-30 & 9-45
எம்.ஜி.ஆர்—சாவித்திரி
வேட்டைக்காரன் (புதிய பிரதி)

லிடோ (யாழ். நகர்) — போன்: 7898 — தினசரி 4 காட்சிகள்
ஜெமினி—சரோஜாதேவி
ஆடிப்பெருக்கு

REGAL (Jaffna) — 3rd CROWDED WEEK — Daily 4-30, 7-00 & 9-30 p.m. only
PERCY'S PROGRESS
(Color) (Adults Only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்
Next Attraction
MOUNTAIN IN THE JUNGLE

சாந்தி (யாழ்நகர்) — தினசரி 4 காட்சிகள்
காமினி பொன்சேகா... தமிழன் நடராசாவாக...
தமிழில் பேசி நடிக்கும்
"சறுங்கலே" —சிங்களம் — தமிழ்—
Gamini Fonseka, as Nadarajah
"SARUNGALE"—Sinhala - Tamil
Next Attraction - "BUTTERFLIES ARE FREE"

மனோகரா (யாழ்நகர்) — தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ராஜகுமாரி நடித்த
குலேபகாவலி
(புத்தம்புதிய பிரதி)

ராணி (யாழ். நகர்) — தினசரி 4 காட்சிகள்
எஸ்.எஸ்.ஆர்.-ராஜசுலோசனா-பாலையா
தேடிவந்த செல்வம்
(புதிய பிரதி)

2-வது ஜனத்திரள் வாரம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) — தினசரி 10-30, 2-30, 6-15, 9-45
முத்துராமன் - தேவிகா
கல்யாணகுமார் நடித்த
நெஞ்சில் ஓர் ஆலயம்
குறிப்பு: யாழ்நகரில் இதுவே கடைசித்தடவையாக காண்பிக்கப்படுகிறது.
(புதிய பிரதி)

24-வது வாரம்
வின்சர் (யாழ்ப்பாணம்) — போன்: 488 — தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

# சமயச்சார்பற்ற எந்த...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என்ற உயிர் எழுத்துக்களை அய், அவ் என்று மாற்றுதல் வேண்டும் என்பது அவற்றுள் ஒரு திருத்தம். இதனால் குழப்பம் ஏற்படும் என்பது தெளிவு. செய்யுள் யாப்பிலக்கணத்தில் இது பல பிழைகளை உண்டாக்கும். சில தொடர்களை இந்த முறைப்படி பார்த்தால் வேலியாகக்கூடப் படிக்கவேண்டிய நிலை வரும். உதாரணமாக அவ்வைப்பாட்டி என்ற தொடரைப் பாருங்கள். இந்தத் திருத்தங்கள் இன்னும் சிறிது நிதானமாக ஆராயப்பட்டு இன்னும் தெளிவோடு முழுமை பெற்றிருந்தால் எல்லோரும் மகிழ்ச்சிக்குட்பட்டிருக்கக்கூடும்.

## எதிர்க்கவில்லை...

"தமிழ் மொழியில் சீர்திருத்தங்களை வேண்டாம் என்று சொல்லக்கூடிய பிற்போக்குக் கொள்கையுடையவன் நானல்லன். தமிழ் போன்ற உயிருள்ள சாவா மூவாமொழியில் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டே இருப்பது இயற்கை இது மொழி நூல் விதி. எடுத்துக்காட்டாக பழந்தமிழில் 'எ, ஒ' என்பன புள்ளி வைத்தே எழுதப்பட்டன. அவை மீதான புள்ளி எடுக்கப்பட்டால் 'ஏ, ஓ' எனக் கருதப்பட்டன. இந்த முறை பிற்காலத்தில் மாற்றப்பட்டமையைத் தமிழ் உலகம் ஏற்றுக்கொண்டுள்ளது. இவ்வாறே நிறுத்தற்குறிகள் வீரமா முனிவரால் தமிழில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்களே. ஆகவே மாறிவருகின்ற உலகத்திற்கு வேறுகண்ணோட்டங்கள் எதுவுமின்றி- தக்க அறிஞர்களால் எடுக்கப்படும் முடிவுகளை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதே என் கருத்து".

## ஈழத்து இலக்கியம்

"ஈழத்து இலக்கியங்கள் பற்றியும் இலக்கிய கர்த்தாக்கள் பற்றியும் என்ன நினைக்கிறீர்கள்?"

"ஈழத்து இலக்கியங்களை இருபது ஆண்டுகளுக்கு மேலாக உற்றுநோக்கி வருபவன் நான். தரமான எழுத்துக்கள், கவிதை, உரைநடை, மொழிபெயர்ப்பு, வானொலி நாடகங்கள் ஆகியன நன்கு வளர்ந்துள்ளன. நானும் என் நண்பர்களும் இலங்கை வானொலியின் நாடகங்களை விரும்பிக் கேட்பதுண்டு. அதிலும் அறிவிப்பாளர் எம். எச். அப்துல் ஹமீதின் நாடகங்கள் மிக அருமையாக இருக்கும். அவரது 'ஒரு வீடுகோயிலாகிறது' நாடகம் நம் அனைவரது உள்ளங்களையும் நெகிழவைத்தது. ஈழத்து நாடக வளர்ச்சிக்கு இது தக்கதொரு எடுத்துக்காட்டு என்று கருதுகின்றேன். பொதுவாக பேச்சு நடையில் எழுதக்கூடிய எழுத்துக்களை விட தரமான எழுத்து நடையில் வருவனவற்றை நான் விரும்பிப் படிப்பதுண்டு. அண்மைக்காலத்தில் புதிய எழுத்துக்களைப் பார்க்கின்ற வாய்ப்பு எனக்கு இல்லைஎன்பதை வருத்தத்தோடு கூறுகின்றேன். இருப்பினும் தரமான எழுத்துக்கள்மேலும் மேலும்மேலும் தழைத்தோங்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு".

இருபத்தொரு ஆண்டுகளாக ஈழத்துடன் மிகநெருங்கிய தொடர்பு கொண்டுள்ள பேராசிரியரிடம் 'ஈழநாடு' மூலம் ஈழம்வாழ் மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்றபோது,

## ஈழம்வாழ் தமிழ்மக்களுக்கு...

"ஈழம்வாழ் தமிழ்மக்களைச் சந்திப்பதில் நான் எப்போதும் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்பவன், ஏனென்றால் உண்மையான தமிழ்ப்பற்றும், சமயப்பற்றும், இலக்கிய நாட்டமும், அறிவியல் வேட்கையும், நட்புணர்ச்சியும், அன்பு நோக்கமும் கொண்ட நண்பர்கள் பலரை நான் ஈழத்தில் காண்கின்றேன். நான் ஒவ்வொரு முறையும் ஈழத்திற்கு வருகின்றபோது இங்கே தமிழ் நண்பர்கள் காட்டுகின்ற ஊக்கமும் உற்சாகமும் என் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாயுள்ளது. வெள்ளம்போல் தமிழர் கூட்டம், வீறுகொள் கூட்டம் அன்னார் உள்ளத்தால் ஒருவரே, மற்று உடலினால் பலராய்க் காண்பர்' என்ற இளமையில் நான் படித்த 'தமிழ் இயக்க'வரிகள் ஈழத்திற்குவரும்போதெல்லாம் என் உள்ளத்தில் அலைமோதக் காண்கிறேன். இங்கே வந்து திரும்பும்போதெல்லாம் இங்குள்ள நண்பர்களது நல்லெண்ணத்தை அறிந்துகொண்டு மிகுந்த இளமை பெற்றே திரும்புவேன்.

இங்குள்ள பத்திரிகைகளில் குறிப்பாக ஈழநாடு' எனக்கு எனது கருத்துக்களை தொடர்ந்து தெளிவுற வெளியிட்டுவருவது என்னால் மறக்கஇயலாது இந்தப் பத்திரிகையின் அதிபர் திரு கே. சி தங்கராசா அவர்களுக்கு தனிப்பட்ட முறையிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். எளியநடை, செய்திகளை முந்தித்தரும் போக்கு, நடுநிலைமை நெஞ்சப் பாங்கு இவற்றைக்கொண்ட'ஈழநாடு' தமிழ் மக்களுக்குக் கிடைத்த தொரு வரப்பிரசாதம்.

'ஈழநாடு' இதழில் இந்திய அறிஞர்களுக்குத் தரப்படும் முக்கியத்துவம், பேட்டி பேச்சுச் சுருக்கம் முதலிய வற்றை தமிழ்நாட்டில் பல்கலைக்கழக மேடைகள், கல்லூரி மன்றங்களில் நான் வியந்து பாராட்டியிருக்கின்றேன். தமிழாய்ந்த தமிழருக்கு 'ஈழநாடு' தரும் மதிப்பும் அன்பும் பாராட்டத்தக்கது. இப்பத்திரிகை தமிழ் நாட்டில் பரவுதற்கு ஏற்ற முயற்சிகளை என்றும் மனநிறைவோடு செய்வேன்' [ஸ]

Rio (Jaffna) — Phone: 7667 — Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
SAVAGE INNOCENCE

யாழ்ப்பாணத்தில்

# குழந்தையில்லாதவர்களுக்கு இலவச சிகிச்சை நிலையம்

(மல்லாகம்)

"ஒரு நல்ல குடும்பத்திற்கு குழந்தைகள் அவசியம். இதை உணர்ந்தே குடும்பக் கட்டுப்பாட்டு சேவைப் பிரிவு, குழந்தையில்லாத தம்பதிகளுக்கு ஆலோசனை கூறுவதற்கு கொழும்பில் ஒரு விசேஷ பகுதியை ஏற்படுத்தியுள்ளது. இதைப் போலவே யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலும் யாழ்ப்பாண செயலகத்திலும் குழந்தையில்லாத தம்பதிகளுக்கு இலவச ஆலோசனை வழங்குவதற்கு இரு சிகிச்சை நிலையம் இயங்கி வருகிறது"

இவ்வாறு மல்லாகம் மாதர் மன்றத்தின் ஆதரவில் மல்லாகம் கிராமமுன்னேற்றச்சங்க மண்டபத்தில் குடும்பத்திட்ட சங்கத்தினரால் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் குடும்பத் திட்ட பிரதிநிதி திரு. கலாபரமேஸ்வரன் குறிப்பிட்டார்.

கருத்தரங்கிற்கு திரு. ச. அம்பிகைபாகன் தலைமை தாங்கி உரையாற்றுகையில், மல்லாகம் மாதர் மன்றத்தின் பல்வேறு பணிகளை பாராட்டியதோடு திட்டமிட்ட குடும்பங்களின் அவசியத்தையும் விளக்கினார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் டாக்டர் அம்பிகாபதி உரையாற்றுகையில், "திட்டமிடாதபடி குழந்தைகளைப் பெறும் குடும்பத்தில் பல வழிகளிலும் பிரச்னைகளே எழுகின்றன. குறிப்பாக அதிக பிள்ளைப்பேற்றினால் குழந்தைகளைப் பெறும் தாய்மார்களின் உடல் நிலை பாதிப்படைவதுடன் பல கஷ்டங்களையும் அத்தாயாளவின் எதிர்காலத்தில் எதிர்நோக்கவேண்டியுள்ளது என்றார்.

கருத்தரங்கில் பார்வையாளராகக் கலந்துகொண்ட பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கிணங்க குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து விநியோகஒழுங்குகளை மேற்கொள்வதற்கும்போஷாக்குணவுபற்றி தாய்மார்களுக்கு விளக்குவதற்கும் ஒரு பிரதிநிதியை அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் டாக்டர் அம்பிகாபதி உறுதியளித்தார்.

வைபவத்தில் குடும்பத்திட்ட பிரசாரப் பிரிவினரின் செய்திப் படமும் காண்பிக்கப்பட்டது. மாதர்சங்கச் செயலாளர் திருமதி பாலாம்பிகை சிறீபாஸ்கரன் நன்றி தெரிவித்துப் பேசினார். (ஈ)

# இன்றைய விழாக்கள்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கலாமன்ற சனசமூகநிலைய இந்துசமய அபிவிருத்திச்சங்க இருபத்து மூன்றாவது ஆண்டு நிறைவு விழா இன்று மாலை நல்லூர் கிராமசபை பொது நூல் நிலைய மண்டபத்தில், சங்க தலைவர் திரு. வ. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையும் ஆசியுரை வழங்குவர்.

தமிழ்நாடு அம்பாசமுத்திரம் அறத்துறை கல்லூரி துணைத் தமிழ்ப் பேராசிரியர், செஞ்சொற்கொண்டல் டாக்டர் சோ. சிங்காரவேலனார் சிறப்புரை வழங்குவார்.

பிரதமவிருந்தினராக யாழ் கல்வித்திணைக்கள நிர்வாக அதிகாரியும், நல்லூர்க் கிராமசபை விசேஷ ஆணையாளருமான திரு. ஆ. மகாலிங்கம் கலந்துகொள்வார்.

கலாமன்ற சனசமூகநிலைய கலைத்துறையினரின் "கவிபண் குற்றவாளிக் கூண்டில்" எனும் பொருள்பற்றி வழக்காடு மன்றம் இடம்பெறும் நீதிபதியாக திரு. இ. மகாதேவாவும் வாதிகளாக திரு அ. குமரன், திரு அ வரதராஜன், திரு சி ஜெயராஜ் ஆகியோரும் பிரதிவாதிகளாக திரு மா குலேந்திரன், திரு லாதின்லோகநாதன், திரு சி புஷ்பராசா ஆகியோரும் கலந்துகொள்வர். 'கண்ணைக் கரைக் காவலன்' என்னும் நாடகமும் மேடையேற்றப்படவுள்ளது. (கெ-ஸ)

## தென்புலோலியில்

தென்புலோலி சாளரயடி வீரபத்திரர் ஆலய முன்றலில் இன்றிரவு பல சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம பிர. இரத்தின சபாபதியின் 'எங்கே செல்கிறோம்' என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவும், நல்லை ஆதீன குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் 'குமரகுருபரர்' என்னும் பொருள் பற்றிய இன்னிசை விரிவுரைகளும், உடுப்பிட்டியூர் ஸ்ரீ முருகன் வில்லிசைக் குழுவினரின் "திருப்புகழ் தந்த அருணகிரி' பற்றிய வில்லிசையும், 'சகடத்தார்' நகைச்சுவை நாடகமும், ரி. வித்தியாபதியின் புல்லாங்குழல் மெண்டலின் வாத்திய இசையும் இடம்பெறவுள்ளன (கெ-ஸ)

## சாந்தையர் மடம் உற்சவம்

வண்ணை சாந்தையர் மடம் கற்பகவிநாயகர் கோவிலில் கந்தபுராண படனப்பூர்த்தி விழா இன்றுகாலை முதல் நடைபெறவுள்ளது.

காலை 10-30 அபிஷேக ஆராதனை, 11 00 மணி, புராணபடனம், 12-30 மகேசுரபூசை. 430 கந்தபுராண ஏடு, ஸ்ரீ பாலசுப்பிரமணியப் பெருமான் சுவாமி வீதிவலம் வருதல், 7-35 வள்ளியம்மை திருக்கல்யாண விசேடபூஜை 8-30 வெள்ளிக்கிழமை உற்சவம். (கெ-ஸ)

இ. லெராசா 15 பரமேஸ்வராச் சந்தி



காரைநகரில் சம்பவம்:

# பொதுக் கிணறுகளில் தண்ணீர் அள்ளத் தடை

## வட்டுக்கோட்டை எம். பி.யிடம் புகார்

(சங்கானை)

காரைநகரில் சில பகுதிகளில் உள்ள பொதுக்கிணறுகளில் மக்களில் ஒரு பகுதியினர் தண்ணீர் அள்ளக் கூடாதென தடை செய்யப்பட்டிருப்பதுடன் பயமுறுத்தப்படுவதாகவும், வட்டுக்கோட்டை எம். பி யிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

காரைநகரிலுள்ள திலங்காடு, பாலுக்காடு, வேரப்பிட்டி, கல்லன்தாழ்வு ஆகிய கிராமங்களிலேயே பொதுக்கிணறுகளில் ஒரு பகுதி மக்கள் தண்ணீர் அள்ளுவது தடுக்கப்பட்டுள்ளதாம்.

தண்ணீர் அள்ளச்செல்லும் ஒரு பகுதி மக்களை மற்றொரு பகுதி மக்கள் அடித்து இம்சிப்பதாகவும் கூறப்படுகிறது.

காரைநகர் மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தினர் ஒரு பகுதி மக்களின் குடிநீர் கஷ்டத்தினை தீர்க்குமாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. தி. திருநாவுக்கரசவிடம் கோரியுள்ளனர்.

மறுமலர்ச்சி மன்றத்தினர் எம். பியிடம் சமர்ப்பித்துள்ள தீர்மானத்தில் கூறப்பட்டிருப்பதாவது:

நிரந்தரமாகவே குடிநீர் தட்டுப்பாடு நிலவி வரும் தீவுப்பகுதியான காரைநகரில் விரைவில் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் அங்கும்சாதிப்பிரச்சினை தலைதூக்க இது ஓர் சந்தர்ப்பமாகிவிடும் எனவும் அத்தீர்மானத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கூட்டணி காரியாலயத்தில் வைத்து இந்த தீர்மானத்தை தூதுக்கோஷ்டியிடம் கையேற்ற எம். பி. தாம் இந்த விடயத்தில் உடன் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் முதற்படியாக பவுசர் மூலம் குடிதண்ணீர் இப்பகுதி மக்களுக்கு கிடைக்க ஒழுங்கு செய்வதாகவும் தெரிவித்தார்.

கிணற்றில் நீர் எடுக்க ஒழுங்கு செய்து தருவதற்கும் ஆவன செய்வதெனவும் வாக்குறுதி அளித்தார்.

### ஒய்வூதியம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திருவாளர்கள் க. தம்பையா, க. தாமோதரம்பிள்ளை, இ இரத்தினலிங்கம், உபகாரியதரிசி திரு. ப. தாமோதரம். தனாதிகாரி திரு மு. இராசதுரை பத்துப்பேர்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (அ)

மாணவர்களுக்கு

## உடல் வளர்ச்சியிலும் கவனம் வேண்டும்

(உடுப்பிட்டி)

பாடசாலைகளில் உளவிருத்தி பெறும் மாணவர்கள் உடல் வளர்ச்சியிலும் தமது நேரத்தைச் செலவிட வேண்டும். விளையாட்டுப் போட்டிகள் இதற்கு மாணவர்களுக்குத் தூண்டுதலும், ஊக்கமும் அளிக்கின்றன. விளையாட்டுகள் மாணவர்களிடைய மறைந்துள்ள ஆற்றலையும் வெளிப்படுத்துவதுடன் பாடசாலைகளுக்கும் பெருமையீட்டித் தருகின்றன.

இவ்வாறு பருத்தித்துறை கலட்டி றோமன் கத்தோலிக்க உயர் வித்தியாலய இல்லங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டியில் வித்தியாலயக் கொடியை ஏற்றிவைத்துப் பேசுகையில் பருத்தித்துறைப் பங்குக் குரவர் அருட் திரு. றெஜிராஜேஸ்வரன் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. வின்சென்ற் தலைமையில் இவ் விளையாட்டுப்போட்டி நடைபெற்றது.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. என். துரைசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் "சர்வதேச சிறுவர் ஆண்டாக விளங்கும் இவ்வாண்டில் இத்தகைய விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்படுவது சிறுவர்களுக்கு உற்சாக மூட்டுவதுடன் அவர்களைக் கௌரவிப்பதாகவும் அமைகின்றது. பெற்றோர்களும், ஆசிரியர்களும் சிறுவர்களது திறமையை மற்றவர்களுக்கும் வெளிப்படுத்தி ஊக்குவிக்க வேண்டும்' என்று கூறினார். விளையாட்டுப் போட்டிச் செயலாளர் திரு. சு. வடிவேலு நன்றி கூறினார்.


## பலியிடுதல் ஒழிப்பு

ஆலயங்களில் நடைபெறும் பலியிடுதலை ஒழிப்பதற்கு நீதிமன்றங்களில் விண்ணப்பிக்க உத்தேசிக்கப்பட்டு சட்டத்தரணிகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது பலியிடுதலை ஒழிப்பதற்கு நீதிமன்றங்களின் உதவியை நாடவிரும்பும் அடியவர்கள் உடனடியாக எம்முடன் தொடர்புகொள்ளவும்.

(இலங்கை இந்து இளைஞர் பேரவையின் ஆதரவுடன்)

செயலாளர்,
நல்லூர் இந்து இளைஞர் மன்றம்,
75, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

2699



## அறவழி வாழ்வுப் போராட்டம் பயிற்சி முகாம்

அறவழி வாழ்விலும் - போராட்டமுறைகளிலும் பிறநாடுகளில் பயிற்சிபெற்றவரின் வழிப்படுத்தலின்கீழ் ஒருவாரகாலப் பயிற்சி செப்டம்பர் முதல்வாரத்தில் நடைபெறவுள்ளது.

சாதி ஒழிப்பு. சீதன ஒழிப்பு, சமூக அநீதிகளைப் போக்குதல் போன்ற துறைகளில் ஈடுபட தொண்டர்களை உருவாக்கி, எந்நிலையிலும் போராட்டத்திற்குத் தயாராக வைத்திருக்கும் நோக்கத்துடன் பயிற்சி பெறும் தொண்டர்கள் பயிற்சியை முடித்தபின் தத்தம் இடங்களில் உள்ளவர்களைத் தொடர்ந்தும் பயிற்றுவிக்கவும் இப்பயிற்சி வழிவகுக்கும்.

பயிற்சிபெற விரும்புபவர்கள் பயிற்சிக்கட்டண முற்பணமாக ரூபா 10/- அனுப்பி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளவும்; சுமார் 200 தொண்டர்கள்வரை பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்படலாம்,

செயலாளர்
அறவழிப் போராட்டக் குழு
வேம் இனிமா வீதி,
சாவகச்சேரி.

2700


## த. சு. கழகம் கூடுகிறது

(வண்ணார்பண்ணை)

தமிழர் சுயாட்சிக் கழகத்தின் விசேட பொதுக்கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் சுரன் தியேட்டரில் நடைபெறவிருக்கிறது. கழகத் தலைவர் திரு வ நவரத்தினம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் யாழ் மாவட்டத்தின் சகல தொகுதிகளிலுமுள்ள கழக ஆதரவாளர்களும் கிளைகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ள விருக்கின்றனர்.

இக் கூட்டத்தில் புதிய அங்கத்தவர்கள் பதிவு செய்யும் நிகழ்ச்சியும் உள்ளூராட்சி மன்றங்களில் கழக வேட்பாளர்கள் போட்டியிடுவது சம்பந்தமான ஆலோசனைகளும் நடைபெறவுள்ளன. தொகுதிகளில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களது விபரங்கள் சேகரிப்பதற்கான குழு ஒன்று தெரிவு செய்யப்படவிருக்கிறது.


### நாளை சிறப்பிதழ்

சுழிபுரம் பறாளை சிவசுப்பிரமணியசுவாமி கோவில் ரதோற்சவத்தை ஒட்டிய 'சிறப்பிதழ்' ஒன்று நாளை வெளிவருகிறது.


கலாச்சாரப் பேரவையின்

## தமிழ் நாடகப் போட்டி 30 நாடகங்கள் தெரிவு

(கொழும்பு)

இலங்கை கலாச்சாரப் பேரவையின் தமிழ் நாடக ஆலோசனைக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் தமிழ் நாடக விழாவில் பிரதேச நாடகங்களுக்குரிய போட்டியில் கலந்து கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்ட நாடகங்களின் விபரங்கள் வெளியாகியுள்ளன.

ஆலோசனைக் குழுத்தலைவர் கலாநிதி ஆ. சுந்தையா தலைமையில் தெரிவு செய்யப்பட்ட பிரதியளவிலான நாடகங்கள் வருமாறு:

நவீன நாடகங்கள், சிதைவுகள், தொடர்ந்த கதை முடிவதில்லை, இப்படியும் நடக்குமா?, வேட்டை, விமலதர்ம சூரியன், பயணம், இருட்டில் குருட்டாட்டம், புது உறவுகள் மலர்கின்றன, துயரத்தின் சுவடுகள், பொறுத்தது போதும், வீரத்தளபதி, சங்கமம், காதலே நீ வாழி, நல்லமனம் வேண்டும், ஐக்கா பார், ஊசியும் நூலும், வாழவைத்த வாத்தியார், சக்காராம் பைண்டர், விடியும், எமர் ஜென்சி, ஒரு மலர் கருகுகிறது, ஜானவி கல்யாணம், விஷப் பூச்சிகள், சாவின் மடியில், அலைகள். உன் கண்ணில் நீர் வடிந்தால்.

பாரம்பரிய நாடகம்: பஞ்சவடிக்காவலன், காமன் கூத்து, பக்த நந்தனார், துரோணர். (கு)

## சிவகுமாரனின் இலட்சியப்பற்று

(யாழ்ப்பாணம்)

"தமிழன் என்றோர் இனம் உண்டு, தனியே அவர்க்கோர் குணம் உண்டு, அமிர்தம் அவரது மொழியாகும். அன்பே அவனது வழியாகுமென்று சாத்வீகமாக வாழ்ந்த மக்கள் மத்தியிலே பொங்கு தமிழர்க்கு இன்னல் நேர்ந்தால் சங்காரம் நிசமென்பதை மெய்ப்பிக்கும் வகையிலே சாதனை வீரனாகத் திகழ்ந்தவன் சிவகுமாரன், என்று தமிழர் விடுதலை கூட்டணித் தலைமைப் பணியகத்தில் இடம்பெற்ற 'சிவகுமாரன் நினைவுதினம்' கருத்தரங்கில் உரை நிகழ்த்தும்போது உரும்பிராய் ஆனந்தன் குறிப்பிட்டார்.

இவ்விழாவிற்கு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் கிளைப்பிரமுகர் திரு. நமசிவாயம் தலைமைதாங்கினார்.

உரும்பிராய் ஆனந்தன் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

வன்முறையை ஏற்றுக்கொள்ளாத நாம் சாத்வீக வழிமுறைகளைத்தெரிந்துகொண்ட மகாத்மாகாந்தி எப்படி பகவத்சிங் மரித்தபோது மரியாதை செலுத்தினாரோ, சுபாஸ் சந்திரபோசின் நேர்மையான அப்பழுக்கற்ற உள்ளத்தை, செயல்திறனை மதித்தாரோ அதே போன்று சிவகுமாரனுக்குத் தரப்படவேண்டிய மரியாதையை, பெருமையை மதுக்காது தரக் கடமைப்பட்டுள்ளோம். அவனது வன்முறையை நாம் ஏற்கிறோமோ இல்லையோ என்பது அல்ல நம்முன் உள்ள கேள்வி. வீரம் விளைத்த சிவகுமாரனின் நோக்கம் அப்பழுக்கற்றது. தாயகத்தின் விடுதலையே இலட்சியமாகக் கொண்டது என்கின்ற உண்மையை நாம் ஏற்றுக்கொண்டால் போதுமானது. வன்முறையை நாடியோர் யாவரும் பயங்கரவாதிகளானால் உலகநாடுகள் பலவற்றின் தேசத் தலைவர்களாக வரலாறு போற்றும் உலகப் பெரியார்கள் பலரை நாம் நிந்திப்பதாகிவிடும். நாம் போற்றுவது சிவகுமாரனின் நேர்மையையும் இலட்சியப் பற்றையும். நாடு மீட்க தன்உயிரையே அர்ப்பணித்த தியாகத்தையுமே." என்றார்.

மற்றும் பலர் பேசினார்கள். [செ]

### யாழ், உதவி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவரை யாழ் மேயர் திரு. விசுவநாதனும், ஆணையாளரும் வரவேற்று உதவி மேயரின் காரியாலயத்துக்கு அழைத்துச் சென்றனர்.

## இன்றைய நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

வண்ணை கிலேர் ஒழுங்கை ஸ்ரீ மகாமாரி அம்பாள் உற்சவத்தின் எட்டாம் திருவிழாவான இன்று தவில்மேதை தட்சணாமூர்த்தியின் மகன் உதயசங்கரின் தவில் கச்சேரியும் இன்னிசைக் கச்சேரிகளும் நடைபெறவுள்ளது.

## நயினை உற்சவம் இன்று ஆலோசனை

(வண்ணார்பண்ணை)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் உற்சவம் சம்பந்தமான அரச ஏற்பாடுகளை கவனிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று இன்று யாழ் மாவட்ட அமைச்சுச் செயலாளர் திரு யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் நடைபெறவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை யாழ், மாவட்ட பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. என். சண்முகசுந்தரம் மேற்கொண்டுள்ளார். (க)


யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி

## பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

காலம்: 09- 06- 1979 (சனிக்கிழமை)
நேரம்: இரவு 8- 15
இடம்: கல்லூரி மஹ்மூத் மண்டபம்

பெற்றோர். பழைய மாணவர்கள், நலன்விரும்புவோர், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள்-

2704


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Reegistered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No' 49, Telegram: Eelanaadu! Tele / 69